ஏப்ரல் – ஜூன் (2026)

جماعت اسلامی ھند

# கடந்து வந்த பாதை

மின்னிதழ்

WWW.JIHTN.ORG

# தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு

## TN - RW 2026




## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்

தமிழ்நாடு - புதுச்சேரி

## பொறியாளர் நகர் முஹல்லாவாசிகள் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது...



4.4.2026 சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை மதுரையில் பொறியாளர் நகர் முஹல்லாவாசிகள் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. சகோதரி பஷீரா கிராஅத் ஓதி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். பொறியாளர் நகர் ஊழியர் வட்டப் பொறுப்பாளர் சகோ. சகிலா வரவேற்புரையாற்றினார். மதுரை மகளிர் அணி பொறுப்பாளர் சகோ. நஜ்மா, "ரமலானுக்குப் பின் நமது இறையச்சத்தின் நிலை" என்ற தலைப்பில் உரையாற்றினார். உரையைத் தொடர்ந்து வந்திருந்த சகோதரிகள் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். ரமலானில் பெற்ற பயிற்சியை இன்ஷா அல்லாஹ் மீண்டும் தொடர வேண்டும் என்ற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் தொடர்வோம் என்று தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இறுதியாக சகோ. பானு நன்றியுரையாற்ற, நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. விருந்தினர்களுக்கு இனிப்பு மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

## திருப்பூர் தெற்கு தொகுதி திமுக வேட்பாளருக்கு ஜமாஅத்தின் ஆதரவு தெரிவிப்பு...



23.04.2026 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் திருப்பூர் தெற்கு தொகுதி திமுக வேட்பாளர் ந. தினேஷ் குமார் அவர்களும், திமுக நிர்வாகிகளும் ஜமாஅத் அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர். அவரிடம் ஜமாஅத்தின் ஆதரவு நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டதுடன், வெற்றி பெற வாழ்த்துகளும் கூறப்பட்டன. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வெல்ஃபேர் பார்ட்டி ஆஃப் இந்தியாவின் மாநிலத் தலைவர் எஸ்.என். சிக்கந்தர் அவர்கள் கலந்து கொண்டு, வேட்பாளர் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநகரத் தலைவர் ஏ. முகமது காசிம், மகளிர் அணி பொறுப்பாளர் ஹம்சா பேகம் மற்றும் உறுப்பினர்கள், ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் கிளை சார்பில் ஹோமியோபதி மருத்துவ முகாம் நடைபெற்றது...

10.04.2026 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் கிளை ஏற்பாடு செய்த ஹோமியோபதி மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்து நோய்களுக்கும் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன. இந்த முகாமில் பொதுமக்கள், ஆண்கள் மற்றும்

பெண்கள் என மொத்தம் 98 பேர் பயனடைந்தனர். மகளிர் அணி உறுப்பினர்கள் முகாம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பும் உதவியும் வழங்கினர். ஹோமியோபதி மருத்துவருக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அமீரே மகாமி முகமது காசிம் அவர்கள் அகிலத்திற்கோர் அருட்கொடை நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ற புத்தகத்தை வழங்கினார். உடன் வந்த இரு செவிலியர்களுக்கு நஜிமா ஹம்சா பேகம் அவர்கள் எங்கே அமைதி என்ற புத்தகத்தையும், உறுப்பினர் ஜபின்பானு இஸ்லாம் மனித குலத்துக்கு வழங்கியது என்ன? என்ற புத்தகத்தையும் வழங்கினார். பஷீர் அகமது (முத்தவல்லி) அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து கொடுத்தார்.



## கடையநல்லூர் கிளையில் கோடைக்கால இஸ்லாமிய வகுப்புகள் தொடக்கம்...



18.04.2026 அன்று ஜமாஅத் அலுவலகத்திலும் ரஹ்மானியாபுரம் அலுவலகத்திலும் கடையநல்லூர் கிளை நடத்தும் கோடைக்கால இஸ்லாமிய வகுப்புகள் தொடங்கின. சகோதரர் சாலிடாரிட்டி பொறுப்பாளர் தவ்ஃபீக் அவர்கள் கிராஅத் ஓதினார். அமீரே மகாமி பீர்முஹம்மது அவர்கள் துவக்கவுரையாற்றி, “திரையில் விளையாடாதே, தரையில் விளையாடு” என்ற வாசகத்துடன் இஸ்லாமிய கருத்துகளை வலியுறுத்தி வகுப்பைத் தொடங்கி வைத்தார். சிஐஓ பொறுப்பாளர்கள் வஹிதா, பானு, சித்தீக்நிஸா, கிள்ர்பானு, தமீனா, மகளிர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா பானு மற்றும் ஆசிரியர் மும்தாஜ் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகளின் விருப்பங்களைக் கேட்டறிந்ததுடன், இளம் வயதில் சாதனை படைத்த குழந்தைகள் குறித்து எடுத்துரைத்து அவர்களை உற்சாகப்படுத்தினர். மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. இவ்வகுப்பில் 70 குழந்தைகள் கலந்து கொண்டனர். அல்ஹம்துலில்லாஹ்.

## உறுப்பினர், ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த தர்பியா வகுப்பு நடைபெற்றது...



19.04.2026 காலை 7.00 மணி அளவில் உறுப்பினர், ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த தர்பியா வகுப்பு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் தலைவர் ஏ. முகமது காசிம் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் திருக்குர்ஆன்

விரிவுரையை ஏ. முகமது காசிம் (மகாமி) அவர்கள் வழங்கினார். “இதுதான் தஸ்கியா” என்ற தலைப்பில் சகோதரர் இசாக் அஹமது அவர்களும், “அழைப்புப் பணியும் நமது நிலையம்” என்ற தலைப்பில் சகோதரர் அன்வர் தீன் அவர்களும் உரையாற்றினர். உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டதுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது. மேலும், 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திமுக தலைமையிலான கூட்டணியை ஆதரித்து தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## கடையநல்லூர் கிளை சார்பில் ஜிஐஓ வகுப்பு நடைபெற்றது...



அல்லாஹ்வின் கிருபையால் 20.04.2026 அன்று கடையநல்லூர் கிளை சார்பில் நடைபெற்ற ஜிஐஓ வகுப்பை மாணவி ஜஸினா கிராஅத் ஓதி தொடங்கி வைத்தார். “காலம் ஓர் அருட்கொடை” என்ற தலைப்பில் மகளிர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா பானு உரையாற்றினார். தொடர்ந்து மாணவிகளின் தனித்திறமைகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இளம் வயதில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த மாணவியர்கள் குறித்து எடுத்துரைத்து மாணவிகள் உற்சாகப்படுத்தப்பட்டனர். மேலும், சிறு விளையாட்டுகள் நடத்தப்பட்டு குளிர்பானம் வழங்கப்பட்டது. இவ்வகுப்பில் 20 மாணவிகள் கலந்து கொண்டனர். அல்ஹம்துலில்லாஹ்.

## ரிஃபா 2026 உச்சி மாநாட்டின் அதிகாரப்பூர்வ லோகோ வெளியீடு.



ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் சார்பில், ரிஃபா 2026 உச்சி மாநாடு வருகிற 16.05.2026 அன்று சென்னையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 400 முதல் 500 வரையிலான ரிஃபா உறுப்பினர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர். இதனை முன்னிட்டு, 19.04.2026 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி ஏ. முஹம்மது ஹனிபா மன்பயீ, மாநிலத் துணைத் தலைவர் ஜனாப் ஐ. ஜலாலுதீன் மற்றும் சென்னை மெட்ரோ தலைவர் ஜனாப் நசீர் அத்தாவுல்லாஹ் ஆகியோர் முன்னிலையில் மாநாட்டின் அதிகாரப்பூர்வ லோகோ வெளியிடப்பட்டது. ரிஃபா 2026 உச்சி மாநாட்டின் முக்கிய நோக்கம் தமிழ்நாடு முழுவதும் ரிஃபாவின் செயல்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு உயர்த்துவதாகும். வணிக சமூகத்தினரிடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி, மதிப்பு சார்ந்த ஒத்துழைப்பை உருவாக்குவதன் மூலம் தனிப்பட்ட வணிக வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், மாநிலத்தின் வளர்ச்சிக்கும், தேசத்தின் கட்டமைப்புக்கும் பங்களிப்பதே இதன் நோக்கமாகும். இஸ்லாமிய நெறிகளையும் நீதியான கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சமூகத்தில் நல்ல பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய நிகழ்வாக இந்த மாநாட்டை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநாடு

வெற்றிகரமாக நடைபெற்று, தமிழ்நாட்டு வணிக உலகில் நேர்மறையான மாற்றத்திற்கான உந்து சக்தியாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக மாநிலத் தலைவர் யூனுஸ் சேட் தெரிவித்துள்ளார்.

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாணவியர் கோடை கால சிறப்பு நிகழ்ச்சி...

திருப்பூர் மாவட்டத்தில் 19.04.2026 அன்று "ஈமானால் இணையும் இதயங்கள் புன்னகை மலரும் சகோதரித்துவம்" என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அல்லாஹ்வின் திருமறை வசனங்களை ஜிஐஓ மாணவி அஸ்வியா ஓதினார். தொடர்ந்து வரவேற்புரையை ஜிஐஓ பொறுப்பாளர் ஏ.ஆர். சுஹைனா ஆற்றினார். தலைமை உரையை ஜிஐஓ கண்காணிப்பாளர் சகோதரி சம்சியா அவர்கள் தெளிவாக வழங்கினார். அதனைத் தொடர்ந்து அல்முஸம்மில் (73:1–20) அத்தியாயம் தொடர்பான குர்ஆன் கூட்டாய்வு நடைபெற்றது. இந்தக் கூட்டாய்வின் விளக்கத்தை ஜிஐஓ அபிமானிகள் தெளிவாக எடுத்துரைத்தனர். இறுதியாக, இஸ்லாமிய முறைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவிகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். நன்றியுரையை ஜிஐஓ பொறுப்பாளர் ஏ.ஆர். சுஹைனா வழங்கினார். நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.



## கும்பகோணம் கிளை சார்பில் அன்னை ஆதுரகத்திற்கு நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது...



21.04.2026 அன்று கும்பகோணம் கிளை சார்பில் அன்னை ஆதுரகம் இலவச மருத்துவ காப்பகத்திற்கு சென்று அங்குள்ள நோயாளிகளைச் சந்தித்தனர். நோயாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகள் வழங்கப்பட்டன. இந்நலத்திட்ட உதவி நோயாளிகளுக்கு பயனுள்ளதாக அமைந்தது.

## உடுமலை கிளை சார்பில் ஹஜ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது...



25.04.2026 அன்று உடுமலை கிளையில் வாராந்திர குர்ஆன் வகுப்பில் பங்கேற்று வரும் ஆதரவாளர் பெண்ணும், அவருடைய கணவரும் ஹஜ் பயணத்திற்கு முன்பாக உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டார்களுக்காக சிறப்பு விருந்து மற்றும் பயான் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்வில்



உரையாற்ற ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. அதனடிப்படையில், “ஹஜ் ஒரு உயிரோட்டமான இபாதத்” என்ற தலைப்பில் உடுமலை கிளை மகளிரணி தலைவி ஏ. மெஹராஜ் உரையாற்றினார். ஹஜ் என்பது வெறும் சடங்கு ரீதியான இபாதத் அல்ல; அது உயிரோட்டமான வரலாற்றின் அடிப்படையிலானது என்றும், அதில் நாம் கொண்டு செல்வது இறையச்சமே என்றும் உரையின் சாராம்சமாக அமைந்தது. இந்நிகழ்வில் பெண்கள், ஆண்கள் என 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும், ஜமாஅத்தின் ஊழியர்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## கடத்தூர் கிராமத்தில் பெண்களுக்கான சிறப்பு பயான் நிகழ்ச்சி நடைபெற்றது...



*25.04.2026* அன்று உடுமலை அருகே உள்ள கடத்தூர் கிராமத்தில், அப்பகுதி பள்ளிவாசல் நிர்வாகிகளின் அழைப்பின் பேரில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளை சார்பாக பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பெண்களுக்கான பயான் வகுப்பு நடத்துமாறு பள்ளிவாசல் நிர்வாகிகள் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஊழியர் வட்டப் பொறுப்பாளர் ஆயிஷா ஹக்கீம், “அர்-ரகீப்” என்ற தலைப்பில் உரையாற்றினார். தொடர்ந்து, நிகழ்வின் மையக் கருத்தாக “சமகாலத்தில் பெண்களின் நிலைப்பாடு” என்ற தலைப்பில் உடுமலை கிளை நாஜிமா மெஹராஜ் சிறப்புரையாற்றினார். பெண்கள் தற்போது செல்போன்கள் மூலம் ரீல்ஸ் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், ரீல்ஸ் பதிவிடுபவர்களாகவும் மாறி வருவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இத்தகைய செயல்பாடுகளின் விளைவுகளை உணர்ந்து, மார்க்கம் வாழ்வியல் நடைமுறையோடு தொடர்ந்து இணைந்திருக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. மேலும், குடும்பப் பெண்கள் தவறான வழிகேடுகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சிக்குப் பின்னர், “எங்கள் குடும்பத்தினருடன் அமர்ந்து பேசுவது போன்ற உணர்வுபூர்வமான உரையாக அமைந்தது” என்று பெண்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். பள்ளிவாசல் நிர்வாகிகளும் மாதம் ஒருமுறை இதுபோன்ற பயான் வகுப்புகளை நடத்த வருமாறு கேட்டுக்கொண்டனர். இந்நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## கடையநல்லூர் கிளை சிஐஓ கோடைக்கால இஸ்லாமிய வகுப்பில் சிலம்பம் விழிப்புணர்வு நிகழ்ச்சி...

கடையநல்லூர் கிளை சார்பாக நடைபெற்று வரும் சிஐஓ கோடைக்கால இஸ்லாமிய வகுப்பில், “திரையில் விளையாடாதே, தரையில் விளையாடு” என்ற வாசகத்துடன்

சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிலம்பம் ஆசிரியர் செய்யது முஹம்மது மசூது அவர்கள், சிலம்பத்தின் சிறப்புகள் குறித்தும், மறக்கப்பட்டு வரும் தற்காப்புக் கலைகளில் ஒன்றாக சிலம்பம் விளங்குவது குறித்தும் மாணவர்களிடம் உரையாற்றினார். குழந்தைகள் ஆர்வமுடன் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சிலம்பப் பயிற்சி பெற்ற மாணவர்கள், குழந்தைகளுக்காக சிலம்பக் கலை நிகழ்த்தி மகிழ்ச்சியளித்தனர். பயிற்சி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அமீரே மகாமி சகோதரர் பீர்முஹம்மது அவர்கள் பரிசுகள் வழங்கினார். நிகழ்ச்சியின் இறுதியில் குழந்தைகளுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது. இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



## தேனி கிளை மகளிரணி சார்பில் கோடைக்கால பயிற்சி வகுப்பு நிறைவு மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது...

தேனி கிளை மகளிரணி நடத்திய சிஐஓ மற்றும் ஜிஐஓ மாணவ, மாணவியருக்கான கோடைக்கால பயிற்சி வகுப்பு நிறைவு மற்றும் பரிசளிப்பு விழா 28.04.2026 அன்று தேனி சில்லறை பலசரக்கு வியாபார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியை சகோதரி சர்பு நிஷா தொகுத்து வழங்கினார். வரவேற்புரையை சகோதரி ரம்ஜான் ஆற்றினார். ஜிஐஓ மாணவி சாதிரா கிராஅத் ஓதினார். துவக்க உரையை சகோதரி நிஃமத் ஹஸீனா (சிஐஓ பொறுப்பாளர்) வழங்கினார்.






சிறப்பு நிகழ்வாக சடைமஸ்தான் சிலம்ப அகாடமியில் பயிற்சி பெற்ற மாணவர்களின் சிலம்பாட்டம் நடைபெற்றது. தொடர்ந்து, சிலம்பம் குறித்த விளக்க உரையை தேனி கிளை அமீரே மகாமி சகோதரர் அபுதாஹிர் ராஜா வழங்கினார். “இன்றைய குழந்தைகளும் நாமும்” என்ற தலைப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மதுரை செயலாளர் சகோதரர் பஷீர் அஹமது சிறப்புரையாற்றினார். பயிற்சி வகுப்பில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், வகுப்புகளை திறம்பட நடத்திய ஆசிரியைகளுக்கும், பாட்டிகள் தின நிகழ்வில் பங்கேற்ற பாட்டிகளுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும், சடைமஸ்தான் அகாடமியின் ஆசானுக்கும் மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சிஐஓ மற்றும் ஜிஐஓ மாணவ, மாணவியர்,



அவர்களது பெற்றோர், தேனி புதுப்பள்ளிவாசல் மற்றும் அல்லிநகரம் பள்ளிவாசல் நிர்வாகிகள், தேனி கிளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## வேலூரில் கோடைக்கால இஸ்லாமிய வகுப்புகள் நிறைவு விழாவுடன் நிறைவடைந்தன...



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வேலூர் கிளை சார்பில் 24.04.2026 முதல் 02.05.2026 வரை கோடைக்கால இஸ்லாமிய வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில் 5 முதல் 11 வயது வரையிலான சிறுவர், சிறுமியர்களுக்கும், 12 முதல் 30 வயது வரையிலான மாணவர்களுக்கும் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இஸ்லாத்தின் ஐந்து கடமைகள், ஹிஜாப், ஹயா (நாணம்), இஸ்லாத்தில் நட்பு, தூய்மை, பெற்றோர், உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாரின் உரிமைகள், சொர்க்கத்தின் அருட்கொடைகள் மற்றும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பு உள்ளிட்ட தலைப்புகளில் விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு தலைப்பையும் மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைப்பதற்காக ஊழியர்கள் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர். இவ்வகுப்புகளில் 70-க்கும் மேற்பட்ட மாணவர்கள்



பங்கேற்றனர். 02.05.2026 அன்று நடைபெற்ற நிறைவு விழா, யூசுப் ஓதிய கிராஅத்துடன் தொடங்கியது. தொடர்ந்து, வகுப்புகளில் கற்றுக்கொண்ட கருத்துகள் குறித்து மாணவர்கள் உரையாற்றினர். மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியின் இறுதியில் பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு இனிப்புகள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. வகுப்புகள் குறித்து பெற்றோர்கள் மிகுந்த ஆர்வத்தையும் வரவேற்பையும் வெளிப்படுத்தினர். மேலும், ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டு வரும் படிப்பகச் சுற்றம் குறித்து நாஜிமா விளக்கமளித்து, பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுடன் இணைந்து இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தார்.

## கடையநல்லூரில் “திரையில் விளையாடாதே, தரையில் விளையாடு” விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது...




கடையநல்லூர் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிளை சார்பாக கடந்த 12 நாட்களாக நடைபெற்ற கோடைக்காலப் பயிற்சி வகுப்புகளின்

நிறைவு நிகழ்வாக, 02.05.2026 அன்று காலை 8.30 மணிக்கு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட “திரையில் விளையாடாதே, தரையில் விளையாடு” என்ற விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. நிகழ்ச்சியை எழுத்தாளர் சேயன் இப்ராஹிம் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, கல்வத் நாயகம் சன்னதி தெரு மற்றும் அல்லிமூப்பன் தெரு வழியாக மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சியின் இறுதியில் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சிஐஓ மற்றும் ஜிஐஓ மாணவர்கள் என 90-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மே தினத்தை முன்னிட்டு தொழிலாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஜிஐஓ திருப்பூர் மாணவிகள்...



01.05.2026 அன்று மே தினத்தை முன்னிட்டு ஜிஐஓ திருப்பூர் மாணவிகள், திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்திற்குச் சென்று அங்கு பணியாற்றி வந்த காவல்துறை பணியாளர்கள் மற்றும் பழைய பேருந்து நிலையம் சுற்றுவட்டாரத்தில் பணிபுரியும் சாலைத் தூய்மைப் பணியாளர்கள், தினக்கூலி தொழிலாளர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர். அவர்களுக்கு விழிப்புணர்வு பிரசுரங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கி, மே தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர். தொழிலாளர்களின் உழைப்பை மதித்து கௌரவிப்பதுடன், உழைப்பின் மரியாதையை ஊக்குவிப்பதும், அர்த்தமுள்ள பாராட்டுகளின் மூலம் சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதும் இம்முயற்சியின் நோக்கமாக அமைந்தது. நிகழ்வு சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்றது.

## தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு (Tamilnadu Relief Wing : TN-RW) தன்னார்வலர்கள் 3 வது பயிற்சி முகாம்...

தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழு (Tamil Nadu Relief Wing – TN-RW) தன்னார்வலர்களுக்கான மூன்றாவது பயிற்சி முகாம் 02.05.2026 மற்றும் 03.05.2026 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெற்றது. முதல் நாள் காலை 9.30 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. சகோதரர் முஹம்மது ஆரிப் தலைமை தாங்கினார். தொடக்க உரையை சகோதரர் உமர் பாரூக் வழங்கினார். தொடர்ந்து காலை 11.00 மணி முதல் வெயிட் ஷிப்டிங் (Weight Shifting), மெட்டல் கட்டிங் (Metal Cutting), வுட் கட்டிங் (Wood Cutting), மரம் ஏறுதல் (Tree Climbing) உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன. மதிய அமர்வில் ஃப்ளோட்டிங் ரெஸ்க்யூ (Floating Rescue) தொடர்பான செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.





03.05.2026 அன்று நடைபெற்ற இரண்டாம் நாள் பயிற்சியில், உயரமான கட்டிடங்களிலிருந்து அவசர காலங்களில் கயிறு மூலம் கீழே இறங்குதல், மேலே ஏறுதல் மற்றும் தீ விபத்து ஏற்பட்ட கட்டிடங்களின் மாடியிலிருந்து கயிறு உதவியுடன் மக்களை மீட்பது தொடர்பான பில்டிங் ஃபயர் ரெஸ்க்யூ (Building Fire Rescue) பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீபா மன்பயீ தலைமை உரையாற்றினார். பின்னர் இதுவரை வழங்கப்பட்ட பயிற்சிகளின் அடிப்படையில் தன்னார்வலர்களுக்கு திறன் சோதனை (Skill Test) நடத்தப்பட்டு அவர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இறுதியாக மாநிலத் துணைத் தலைவர் சகோதரர் ஐ. ஜலாலுதீன் உரையாற்றினார். மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் அனைத்து தன்னார்வலர்களுக்கும் சீருடைகளை வழங்கி கௌரவித்தார். டிஎன்-ஆர்டபிள்யூ (TN-RW) கேப்டன் அசாருதீன் நன்றியுரையாற்றியதுடன் பயிற்சி முகாம் இனிதே நிறைவுற்றது.

## கோடைக்கால இஸ்லாமிய வகுப்பு நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது...

10.05.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கோடைக்கால இஸ்லாமிய வகுப்பின் நிறைவு விழா நடைபெற்றது. நிகழ்ச்சி ஜிஐஓ மாணவி ஃபர்ஹானா ஓதிய கிராஅத்துடன் தொடங்கியது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி நாஜிமா சகோதரி ஹம்ஸா பேகம் அவர்கள் “Journey to Jannah” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, ஜிஐஓ தலைவர் மாணவி ஏ.ஆர். சுஹைனா ஜிஐஓ குறித்து அறிமுக உரையாற்றினார். ஜிஐஓ உறுப்பினர்கள் மற்றும் அபிமானிகளுக்காக நடைபெற்ற “A Blissful Day of Sisters and Smiles” ஒருநாள் தர்பியா நிகழ்வில் பங்கேற்ற மாணவிகளுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. இடைவேளைக்குப் பின்னர், ஜிஐஓ அபிமானி மாணவி நூருல் ஹிதாயா பாடல் பாடினார். அதனைத் தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருப்பூர் மாநகரத் தலைவர் ஜனாப் முஹம்மது காசிம் நிறைவுரையாற்றினார். இறுதியாக, பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 15 நாட்கள் நடைபெற்ற கோடைக்கால இஸ்லாமிய வகுப்பை சிறப்பாக நடத்த ஒத்துழைத்த ஜிஐஓ உறுப்பினர்கள் மற்றும் மகளிரணி பொறுப்பாளர்களுக்கு ஊக்கப்பரிசாக நினைவுக்கேடயங்கள் வழங்கப்பட்டன ஜிஐஓ மாணவி



உம்மு ஸல்மா நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியை ஜிஐஓ மாணவி ஜுல்ஃபியா தொகுத்து வழங்கினார். இந்த 15 நாட்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் மாணவிகளின் ஆளுமை மற்றும் நற்பண்புகளை வளர்க்கும் நோக்கில் “Good Deed Hunt” என்ற பெயரில் 12 நற்செயல்கள் வழங்கப்பட்டு, அவற்றை தினந்தோறும் கண்காணித்து மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக, மாணவிகள் தொழுகைகளை நேரம் தவறாமல் நிறைவேற்றியதாக பெற்றோர்கள் தெரிவித்தனர். குறிப்பாக சில மாணவிகள் தஹஜ்ஜத் தொழுகையையும் கடைப்பிடித்தனர். மேலும், குர்ஆனை மொழிபெயர்ப்புடன் வாசித்ததோடு, வீட்டு வேலைகளிலும் உதவியதாக கூறப்பட்டது. ஒரு மாணவி தாம் சேமித்து வைத்த பணத்தில் ஐந்து கிலோ அரிசி வாங்கி ஏழை ஒருவருக்கு வழங்கியதாகவும், சிலர் அறிமுகமில்லாதவர்களுக்காகவும் துஆ செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நற்செயல்களை வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும் என்ற விருப்பத்தையும் பெற்றோர்கள் பகிர்ந்து கொண்டனர்.



## தமிழ்நாடு சட்டமன்றச் சபாநாயகரை சந்தித்தார் எச். அப்துர் ரகீப்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் முன்னாள் மாநிலத் தலைவரும், மத்திய ஆலோசனைக் குழு உறுப்பினரும், இந்திய பொருளாதார மையத்தின் (ICIF) பொதுச் செயலாளருமான எச். அப்துர் ரகீப் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றச் சபாநாயகர் திரு. ஜே.சி.டி. பிரபாகரன் அவர்களை நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது, இந்திய பொருளாதார மையத்தின் (ICIF) செயல்பாடுகள் மற்றும் இஸ்லாம் தொடர்பான பல்வேறு கருத்துகள் குறித்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது. நீண்ட நேரம் நடைபெற்ற இந்த பயனுள்ள சந்திப்பின் நிறைவாக, சபாநாயகர் அவர்களுக்கு சமரசம் இதழ் மற்றும் இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) வெளியிட்ட நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இச்சந்திப்பும் கலந்துரையாடலும் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமாகவும் அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வட்டியில்லா வங்கி முறையை வலியுறுத்தி முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு...

தமிழ்நாட்டில் வட்டியில்லா வங்கி சேவைகள் (Interest-free Banking) அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கில் பல்வேறு முக்கிய சந்திப்புகள் நடைபெற்றன. தமிழ்நாடு அரசின் புதிய நிதித்துறைச்



செயலாளராக பொறுப்பேற்றுள்ள திரு. சித்திக், ஐஏஎஸ் அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அப்போது, வங்கிகளில் வட்டியில்லா சேவைகளுக்கான சிறப்பு வாயில்களை உருவாக்குவது, வட்டியில்லா பங்கேற்பு பரஸ்பர நிதிகள் மற்றும் சுகூக் போன்ற முதலீட்டு நிதிகளை மாநிலத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்துவது குறித்து, தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் வலியுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும், இதற்காக மலேசியாவின் அனுபவத்தையும் ஒத்துழைப்பையும் பயன்படுத்தலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் புதிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரான திரு. ஷாஜஹான் அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. வட்டியில்லா வங்கி முறைக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன், சமரசம் இதழ் மற்றும் இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் (IFT) வெளியீடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றச் சபாநாயகர் அவர்களை சந்தித்து, திரு. முருகன் எழுதிய "வட்டியில்லா வங்கி முறை" குறித்த தமிழ் கட்டுரை வழங்கப்பட்டது. இறுதியாக, பாத்திமா முசஃபர் அவர்களின் தலைமையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மகளிரணி பிரதிநிதிகளுடன் பயனுள்ள மற்றும் இனிய கலந்துரையாடல் நடைபெற்றது. வட்டியில்லா வங்கி முறை என்பது சமூகநீதிசார்ந்த பொருளாதார மாற்றத்திற்கான முக்கிய முயற்சி என்பதையும், அதற்கான விழிப்புணர்வும் ஆதரவும் சமூகத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தச் சந்திப்புகள் வலியுறுத்தின. இந்த பிரதிநிதிக் குழுவில் இந்திய பொருளாதார மையம் (ICIF) பொதுச் செயலாளர் எச். அப்துர் ரகீப், மலேசியாவில் இஸ்லாமிய வங்கி தொடர்பான டிப்ளமோ பெற்றவரும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ தலைவருமான திரு.என். அத்தாவுல்லாஹ் மற்றும் சமூக ஆர்வலரும் மூத்த செயற்பாட்டாளருமான திரு. ஜான் முஹம்மது ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருச்சியில் ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது...



31.05.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணியளவில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருச்சி பாலக்கரை வட்டம் சார்பில் ஹஜ் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி திருச்சி சாஸ்திரி சாலையிலுள்ள கே.எம்.எஸ். ஹக்கீம் அரங்கில் நடைபெற்றது.மௌலவி ஜெய்னுல் ஆபிதீன் ஸலாமி அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் திருச்சி கிளைத் தலைவர் முனைவர் ஹஜ் மொய்தீன் அவர்கள் தலைமையுரையாற்றினார். தனது உரையில், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நாடு முழுவதும் மேற்கொண்டு வரும் சமய நல்லிணக்கம், கல்வி மற்றும் மக்கள் சேவைப் பணிகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் பனானா லீஃப் உணவகங்கள் மற்றும் ஸ்ரீ அற்புதா ஸ்வீட்ஸ் நிறுவனங்களின் உரிமையாளர் திரு. இரா. மனோகரன்

மற்றும் திருச்சி தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியின் இணைப் பேராசிரியரும், முன்னாள் ஆங்கிலத் துறைத் தலைவருமான முனைவர் வி.எல். ஜெயபால் ஆகியோருக்கு "சமய நல்லிணக்க விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது. விருதுகளைப் பெற்ற இருவரும் தங்களது சமய நல்லிணக்க அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். பாலக்காட்டிலுள்ள மவுண்ட் சீனா கல்வி நிறுவனங்களின் வாழ்க்கைத்திறன் பயிற்சியாளர் ஜனாப் ஏ.பி. அப்துல் நாசர் அவர்கள் "ஹஜ் பெருநாள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தனது உரையில், ஹஜ் பெருநாள் மனித சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயத்தை வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டார். வறுமையை ஒழித்தல், தேவையுடையோருடன் பகிர்ந்து உதவுதல், சாதி, இனம், நிறம் உள்ளிட்ட எந்த வேறுபாடுகளுக்கும் இடமளிக்காமல் அனைவரையும் சமமாக மதித்தல் போன்ற உயரிய பண்புகளை இஸ்லாம் வலியுறுத்துவதாக எடுத்துரைத்தார். மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த ஒற்றுமை, சமத்துவம் மற்றும் மனிதநேயக் கொள்கைகளையும் நினைவுகூர்ந்தார். இறுதியாக முனைவர் அ. உமர் பாரூக் அவர்கள் நன்றியுரையாற்றினார். தவ்ஃபிக் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ரிஃபா சேம்பர் ஆஃப் காமர்ஸ் செயலாளர் ஜனாப் காஜா மொய்தீன், தலைமை ஆசிரியர் முனைவர் அந்தோணி லூயிஸ், சுமைதாங்கி இதழின் ஆசிரியர் திரு. முருகன் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சேர்ந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். ஜமாஅத் மாவட்ட செயலாளர் முனைவர் அப்துல் ரஜாக் மற்றும் மக்கள் தொடர்பு செயலாளர் நவாஸ்கான் ஆகியோரின் தலைமையில் பாலக்கரை வட்ட ஊழியர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சி சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் நடைபெற்றது.

## கிருஷ்ணகிரி கிளை சார்பில் மனநலக் காப்பகத்தில் சமூக சேவை நிகழ்ச்சி நடைபெற்றது...

07.06.2026 ஞாயிற்றுக்கிழமை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கிருஷ்ணகிரி கிளை சார்பில் சமூக சேவை முயற்சியின் ஒரு பகுதியாக, குப்பம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள "லிட்டில் ஹார்ட்ஸ்" மனநலக் காப்பகத்திற்கு நேரில் சென்று அங்குள்ள பயனாளிகளைச் சந்தித்தனர். அப்போது, அங்கு தங்கி சிகிச்சை பெற்று வரும் நபர்களின் நலன்கள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்களுக்கு மதிய உணவாக பிரியாணி வழங்கப்பட்டது. தற்போது அந்தக் காப்பகத்தில் சுமார் 40 பேர் பராமரிப்பு பெற்று வருகின்றனர். இந்நிகழ்ச்சிக்கு மாநகரத் தலைவர் திரு. சிபகத்துல்லாஹ் தலைமை தாங்கினார். மண்டல அமைப்பாளர் திரு. அப்துல் ஹமீது சிறப்புரையாற்றி, சமூக நலப் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் காப்பகப் பராமரிப்பாளர் திரு. ஷியாம் சுந்தர் அவர்களை பாராட்டினார். நிகழ்ச்சியில் ஜமாஅத் உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி தன்னார்வலர்கள் கலந்து கொண்டு சமூக சேவைப் பணியில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.



# தியாகத் திருநாள் நிகழ்ச்சி...



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துவரங்குறிச்சி கிளையின் தியாகத் திருநாள் நிகழ்ச்சி இன்று (15.06.2026) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருமறை வசனத்தை சகோதரி ஜமீமா அவர்கள் வாசித்தார். நிகழ்ச்சியை சகோதரி வாஜிதா அவர்கள் வழிநடத்தினார். திருச்சி மண்டல அமைப்பாளர் ஜி. சையது முகமது சாஹிப் அவர்கள் சிறப்புரையாற்றினார்.



சகோதர சமுதாய மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டதுடன், ஜமாஅத்தின் பணிகள் பற்றியும் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 45 சகோதர சமுதாய மக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக சகோதரி வாஜிதா அவர்கள் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சி முடிவில் சகோதர சமுதாய மக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாணி விருந்து உபசரிப்பு நடைபெற்றது.

# இளைஞர்களுக்கான சிறப்பு அமர்வு...




ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மெட்ரோ சார்பில் இளைஞர்களுக்கான சிறப்பு அமர்வு 14.06.2026 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உமர் முக்தார் பட்டன் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) சிறப்புரையாற்றினார். தனது உரையில், இளைஞர்கள் வாழ்க்கையில் எவ்வாறு முன்னேற வேண்டும், தங்களது ஆளுமைத் திறன்களை எவ்வாறு வளர்த்துக் கொள்ள வேண்டும், கிடைக்கும் கால அவகாசத்தை எவ்வாறு பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும் என்பன குறித்து பல நடைமுறை உதாரணங்களுடன் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், சகோதரர் சாதிக் பாஷா அவர்கள் பேசுகையில், கிடைக்கும் வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்துவதன் அவசியத்தையும், கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டியதையும் வலியுறுத்தினார். வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய தனிப்பட்ட முயற்சியே அடிப்படையாக அமைகிறது என்பதை உணர்ந்து, உறுதியுடனும்



அர்ப்பணிப்புடனும் செயல்பட வேண்டும் என இளைஞர்களுக்கு அறிவுறுத்தினார். சென்னை மாநகரத் தலைவர் நசீர் அத்தாவுல்லாஹ் அவர்கள் சிறப்புரையாற்றி, இளைஞர்கள் கல்வி, ஆளுமை மேம்பாடு மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 120-

க்கும் மேற்பட்ட இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சி உற்சாகமான கலந்துரையாடல்களுடன் சிறப்பாக நிறைவுற்றது.

## உடுமலை கிளை மகளிரணி சார்பில் செவிலியர்கள் கௌரவிக்கப்பட்டனர்...



18.06.2026 அன்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் உடுமலை கிளை மகளிரணி சார்பில் செவிலியர்களை சந்தித்து கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடுமலையில் உள்ள ஸ்ரீ சக்ரா மருத்துவமனை மற்றும் பிரியா எலும்பு முறிவு மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர்களை நேரில் சந்தித்து, அவர்கள் ஆற்றி வரும் சேவை மகத்தானது என்றும், ஜாதி, மத வேறுபாடின்றி மனிதநேய அடிப்படையில் பணியாற்றி வரும் அவர்களை மகளிரணி சார்பில் வாழ்த்த வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட செவிலியர்கள் நெகிழ்ச்சியுடன் தங்களது



மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பணிப்பளு மிகுந்த சூழலிலும், அவர்களுக்காக வழங்கப்பட்ட சிற்றுரையை கவனத்துடன் கேட்டு நன்றி தெரிவித்தனர். அந்த உரையில், வயநாட்டைச் சேர்ந்த செவிலியர் சபீனாவின் அர்ப்பணிப்புமிக்க சேவை நினைவுகூரப்பட்டதுடன், இஸ்லாம் அனைவரையும் சமமாக மதிப்பதோடு, மனிதகுலத்திற்கு சேவை செய்வதையும் ஒரு முக்கியக் கடமையாக வலியுறுத்துகிறது என்ற கருத்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், செவிலியர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன் உதயதாரகை இதழும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் மூலம் 20-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் சந்திக்கப்பட்டனர். இதில் சில செவிலியர்கள், “எங்களை இவ்வாறு கண்ணியப்படுத்திய உங்களுக்கும் எங்களது வாழ்த்துகள். இஸ்லாமிய பெண்களின் இத்தகைய சமூக அக்கறைமிக்க செயல்பாடுகள் எங்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றன” என்று மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

## குடியாத்தம் கிளையில் இலவச தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன...



21.06.2026 ஞாயிற்றுக்கிழமை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் குடியாத்தம் கிளை சார்பில் இலவச தையல் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த



10 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், இரண்டு சகோதரிகளுக்கு இலவச தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. இது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் நடத்தப்பட்ட ஆறாவது பயிற்சிக் குழுவின் நிறைவு நிகழ்வாகும். நிகழ்ச்சி இறைமறை வசனம் ஓதலுடன் தொடங்கியது. கிளைத் தலைவர் திரு. இக்பால் அஹ்மத் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் திரு. அப்துல்லா நாசிர் அவர்கள் வாழ்த்துரையாற்றினார். ஆசிரியர் முஹம்மத் நூருல்லாஹ் அவர்கள் சிறு தொழில்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார். சகோதரர் யாசிர் அரஃபாத் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் கிளைப் பொறுப்பாளர் திரு. தாஹா பாய், வேலூர் மாவட்ட மகளிரணிப் பொறுப்பாளர் திருமதி நசீம் மற்றும் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இறுதியாக, "இயக்கமும், இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பும்" என்ற தலைப்பில் மகளிரணிப் பொறுப்பாளர் உரையாற்றியதுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. அல்ஹம்துலில்லாஹ், இந்நிகழ்வில் மொத்தம் 30 பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களில் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த 6 பெண்களும் பங்கேற்றனர். பெண்களின் திறன் மேம்பாடு, சுயதொழில் முன்னேற்றம் மற்றும் பொருளாதாரத் தன்னிறைவை நோக்கி ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பயணம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

# வைகோ மற்றும் ஏர்வாடி ராதாகிருஷ்ணனை சந்தித்த ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ நிர்வாகிகள்...



22.06.2026 திங்கட்கிழமை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சென்னை மெட்ரோ சார்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் (ம.தி.மு.க.) தமிழ்நாடு தலைவர் வைகோ அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடல் நடைபெற்றது அப்போது, ஐஎஃப்டி (IFT) வெளியீடாக டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மது அவர்கள் எழுதிய வெறுப்பு அரசியல் நூலும், ஷேக் முஹம்மது காரக்குன்னு அவர்கள் எழுதிய இஸ்லாமும் அடிமைத்துவமும் என்ற நூலும் அவருக்கு வழங்கப்பட்டன. மேலும், இலக்கியத் துறையின் இமயமும் கலைமாமணியுமான ஏர்வாடி ராதாகிருஷ்ணன் அவர்களையும் சந்தித்து, டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மது அவர்கள் எழுதிய எங்கே அமைதி? என்ற நூல் வழங்கப்பட்டது. இச்சந்திப்புகள் இனிய மற்றும் பயனுள்ள உரையாடல்களுடன் நடைபெற்றன. நூல்கள் வழங்கப்பட்டதன் மூலம் சமூக, இலக்கிய மற்றும் சிந்தனை சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன.



# பத்திரிக்கை அறிக்கைகள்...

**புதுடெல்லி:** அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு வார கால போர்நிறுத்தத்தை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி வரவேற்றுள்ளார்.

ஆபத்தான நிலையை எட்டியிருந்த இந்த மோதல் சூழலில், பிராந்தியம் மற்றும் உலகெங்கிலும் பரவலான கவலையை ஏற்படுத்தியிருந்த நிலையில், இந்த போர்நிறுத்தம் ஒரு அவசியமான இடைவெளி என்று அவர் வர்ணித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு ஜமாஅத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "தற்காலிகமாகப் போர் நிறுத்தப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இது அப்பாவி உயிர்கள் மேலும் பலியாவதைத் தடுத்துள்ளதுடன், ஆழமான மனிதாபிமான நெருக்கடியைத் தவிர்ப்பதற்கான ஒரு தேவையான இடைவெளியாகும். கடந்த சில வாரங்களாக ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திய ராணுவத் தாக்குதல்கள், பொதுமக்கள் உயிரிழப்பதற்கும் முக்கியமான உள்கட்டமைப்புகள் சேதமடைவதற்கும் வழிவகுத்தன. இது சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது. இந்த போர்நிறுத்தம் மேலதிக அழிவுகளை நிறுத்தவும், அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையை நோக்கி நகரவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இருப்பினும், தற்காலிக இடைவெளி என்பது நிரந்தரத் தீர்வு அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு நிலையான மற்றும் நீதியான அமைதிக்கு, ஆக்கிரமிப்பு முற்றிலும் முடிவுக்கு வருவதும், இறையாண்மையை மதிப்பதும் மற்றும் சர்வதேச சட்ட மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதும் அவசியமாகும்."

"இந்த போர்நிறுத்தம் உலகளவில் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தி (Strait of Hormuz) மீண்டும் திறக்கப்பட்டதும், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தைப் பாதித்து இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் பொருளாதாரத்தைப் பாதித்த பதற்றங்கள் தணிந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த அநீதியான மற்றும் தூண்டப்படாத போரைத் தொடங்கிய அமெரிக்காவும் இஸ்ரேலும், இப்போது பதற்றத்தைக் குறைப்பதற்கும் அர்த்தமுள்ள ராஜதந்திர ஈடுபாட்டை நோக்கியும் நகர வேண்டும்.

அதே வேளையில், போர்நிறுத்தத்தின் நிபந்தனைக்குட்பட்ட மற்றும் பலவீனமான தன்மையைக் கருத்தில் கொண்டு நாம் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது. லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பும் நிறுத்தப்பட வேண்டும். மோதல் பகுதிகளைத் தவிர்த்துவிட்டு மேற்கொள்ளப்படும் எந்தவொரு பகுதி அளவிலான போர்நிறுத்தமும் அமைதியற்ற சூழலை நீடிக்கச் செய்யும்." இந்தச் சந்தர்ப்பத்தில், முக்கிய நபர்களைத் திட்டமிட்டு இலக்கு வைக்கும் இஸ்ரேலின் கொள்கையை ஜமாஅத் தலைவர் கடுமையாக விமர்சித்ததுடன், அதை ஒரு கொடூரமான போர்க்குற்றம் என்றும் குறிப்பிட்டார். "சிக்கலான அரசியல் தகராறுகளைத் தீர்ப்பதில் ராணுவ வலிமைக்கு இருக்கும் எல்லைகளை இந்த மோதல் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட

போதிலும், நிலைமை இறுதியில் பேச்சுவார்த்தைக்கே திரும்பியுள்ளது. நீடித்த தீர்வுகளை பேச்சுவார்த்தை, பரஸ்பர மரியாதை மற்றும் சர்வதேச சட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே அடைய முடியும் என்பதை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. கட்டாயப்படுத்தி முடிவுகளைத் திணிக்க முயல்வது பிராந்தியப் பிளவுகளை ஆழமாக்கும். போர்நிறுத்தத்தை அதன் முழு அர்த்தத்தில் மதிக்குமாறும், பேச்சுவார்த்தைகளில் நேர்மையுடன் ஈடுபடுமாறும் அனைத்துத் தரப்பினரையும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கேட்டுக்கொள்கிறது. சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் செயல்களுக்குப் பொறுப்புக்கூறுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும். அமைதி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் இந்திய அரசு ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் கொள்கை ரீதியான பங்கை வகிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

## “தி வோவன் லேண்ட்”கண்காட்சி: இந்தியாவின் முஸ்லிம் வரலாற்றின் மகத்தான பாரம்பரியத்தை பறைசாற்றுகிறது...

புது தில்லி: இந்தியாவின் நாகரிகப் பயணத்தில் முஸ்லிம்களின் வரலாற்றுப் பங்களிப்புகளை விரிவாக விளக்கும் விதமாக, “தி வோவன் லேண்ட்: இந்தியாவின் முஸ்லிம் வரலாற்றின் ஒரு காட்சி விவரிப்பு” என்ற தனித்துவமான கண்காட்சி செவ்வாய்க்கிழமை ஹோக்லாவில் உள்ள அபுல் ஃபசல் என்க்ளேவில் அமைந்திருக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) தலைமையகத்தில் தொடங்கப்பட்டது.



இந்திய வரலாற்று மன்றத்தால் (Indian History Forum) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியை, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி, அஜ்மீர் ஷரீப் தர்கா அஞ்சுமன் கமிட்டி செயலர் மௌலானா சையத் சர்வார் சிஷ்டி, மௌலானா அஸ்கர் அலி இமாம் மெஹ்தி, உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஷம்ஷாத் ஆலம் மற்றும் பல அறிவுஜீவிகள், சமுதாயத் தலைவர்கள் முன்னிலையில் காலை 11:00 மணிக்கு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தனர்.



இக்கண்காட்சி, இஸ்லாம் இந்தியாவுக்கு வருகை புரிந்தது முதல் பல்வேறு துறைகளில் அதன் பன்முகப் பங்களிப்புகளை ஒரு விரிவான காட்சி விவரிப்பாக முன்வைக்கிறது. கல்வி, வர்த்தகம், சமூக சமத்துவம், பெண்கள் அதிகாரம் மற்றும் செவ்வியல் நூல்களின் மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் முஸ்லிம்களின் பங்கை மிகச்சிறந்த மாதிரிகள் மற்றும் காட்சிப்

பொருட்கள் மூலம் இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

மேலும் கட்டிடக்கலை, கலாச்சாரம், மொழி வளர்ச்சி, அறிவியல் மற்றும் வானியல் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் இது காட்சிப்படுத்துகிறது. இக்கண்காட்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்று, பார்வையாளர்களை வரலாற்றின் ஊடாக ஒரு பயணத்திற்கு அழைத்துச் செல்லும் "360-டிகிரி காட்சி அனுபவம்" (360-degree visual experience) ஆகும்.

பல நூற்றாண்டுகளாக இந்தியச் சமூகத்தை வடிவமைத்த அந்தப் பொதுவான பாரம்பரியத்தையும் கலாச்சார ஒருங்கிணைப்பையும் ஆழமாகப் புரிந்துகொள்ளும் வகையில், கதைசொல்லல் முறையோடு காட்சி கூறுகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. வரலாறு குறித்த ஒரு சமநிலையான மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான பார்வையை முன்வைப்பதோடு, இந்தியாவின் உள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைந்த கடந்தகாலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக் கண்காட்சியின் நோக்கம் என்று அமைப்பாளர்கள் விவரித்தனர்.

நம்பிக்கை, சமத்துவம் மற்றும் பகிரப்பட்ட பாரம்பரியம் போன்ற கருப்பொருள்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம், பல்வேறு சமூகங்களின் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட வரலாற்றைப் பிரதிபலிக்க இது பார்வையாளர்களை ஊக்குவிக்கிறது. இக்கண்காட்சி ஏப்ரல் 19, 2026 வரை, தினமும் காலை 10:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை பொதுமக்களுக்காகத் திறந்திருக்கும். தொடக்க நாளிலிருந்தே பல்வேறு தரப்பு மக்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் இக்கண்காட்சிக்கு வருகை தந்து இதிலுள்ள உள்ளடக்கங்களுடன் கலந்துரையாடுமாறு அமைப்பாளர்கள் சிறப்பு அழைப்பு விடுத்துள்ளனர். இத்தகைய முன்முயற்சிகள் சமூக விழிப்புணர்விற்கு பங்களிக்கும் என்பதால், மற்றவர்களையும் அழைத்து வருமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வு வரும் நாட்களில் பெரும் வரவேற்பைப் பெறும் என்றும், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட வரலாற்றுப் பாரம்பரியத்துடன் அர்த்தமுள்ள வகையில் இணைவதற்கான ஒரு தளமாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியில் இஸ்லாம், முஸ்லிம்களின் வரலாற்றுப் பங்களிப்பைப் புறக்கணிக்க முடியாது: டெல்லி மாநாட்டில் வலியுறுத்தல்.

புது தில்லி: இந்திய வரலாற்று மன்றம் (Indian History Forum) சார்பில், இந்திய இஸ்லாமிய கலாச்சார மையத்தில் இரண்டு நாள் பிரம்மாண்ட மாநாடு தொடங்கியது. "இந்தியாவின் வரலாறு, சமூகம் மற்றும் நாகரிகத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பை மறுபரிசீலனை செய்தல்" என்ற முக்கிய கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது. நிகழ்ச்சியின் முதல் நாளில், மக்களவை உறுப்பினர் சசி தரூர், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்




தலைவர் சையத் சஆதாத்துல்லாஹ் ஹுசைனி, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் குர்தீப் சிங் சப்பல், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் முகமது அதீப், மாநிலங்களவை உறுப்பினர் மனோஜ் குமார் ஜா, எழுத்தாளர் அசோக் குமார் பாண்டே, இந்திய வரலாற்று மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஷதாப் மூசா உள்ளிட்ட அறிஞர்களும் முக்கிய ஆளுமைகளும் தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்வில் சசி தரூர் பேசுகையில், "நமது வரலாற்றில் பல்வேறு உண்மைகள் உள்ளன. அதே சமயம், தவறான மற்றும் யதார்த்தத்திற்குப் புறம்பான பல கதையாடல்களை வரலாற்றின் ஒரு பகுதியாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய சூழலில், வரலாற்றின் சரியான உண்மைகளைப் புரிந்துகொண்டு, உண்மையைச் சென்றடைந்து, அதனைச் சமூகத்தின் முன் வைப்பது மிகவும் அவசியம்" என்றார். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் சையத் சஆதாத்துல்லாஹ் ஹுசைனி பேசுகையில், வரலாறு என்பது எந்தவொரு தேசத்திற்கும் மிக முக்கியமானது என்றார். வரலாறு என்பது வெறும் தகவல் மட்டுமல்ல; அது எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான அடிப்படையாகும். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் தொடர்பான வரலாற்றின் முக்கியப் பகுதியை நாடு மறந்துவிடக் கூடாது. அதேபோல், கூட்டு மறதிக்கு ஆளாகவோ அல்லது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் வரலாற்றுப் புரிதலை வடிவமைக்கவோ அனுமதிக்கக் கூடாது. இத்தகைய மாநாடுகளும் நிகழ்ச்சிகளும் இன்றைய காலத்திற்கு மிகவும் அவசியமானவை. இன்று வரலாறு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சூழ்நிலையில், முஸ்லிம்களும் நீதியின் மீது நம்பிக்கை கொண்ட அனைவரும் முன்வந்து, உலகின் முன் வரலாற்றின் சரியான உண்மைகளை முன்வைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். மாநிலங்களவை உறுப்பினர் மனோஜ் குமார் ஜா பேசுகையில், "இன்று வரலாற்றை மாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது. நமது வரலாறு நமது பாரம்பரியம்; அதைப் பாதுகாப்பது நமது கூட்டுப் பொறுப்பாகும்" என்றார். குர்தீப் சிங் சப்பல் பேசுகையில், வரலாற்றை மாற்றும் முயற்சிகள் நாட்டில் கவலையளிக்கும் நிலையை எட்டியுள்ளன என்றார். முகமது அதீப் கூறுகையில், "ஒரு நாகரிகத்தை அழிக்க வேண்டும் என்று நினைக்கும்போது அதன் வரலாறு மாற்றப்படுகிறது. இன்று அதுதான் நடைபெற்று வருகிறது. இது நமது அடையாளத்திற்கே அச்சுறுத்தலாக அமையலாம்" என்று எச்சரித்தார். இந்த மாநாட்டின்போது, பொருளாதாரம், வர்த்தகம், சமூகவியல் மற்றும் அரசியல் உள்ளிட்ட துறைகளில் முஸ்லிம்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை விளக்கும் ஆய்வுக்கட்டுரைகளைவரலாற்றாசிரியர்களும் நிபுணர்களும் சமர்ப்பித்தனர். மேலும், முஸ்லிம் பெண்களின் வரலாற்றுப் பங்கு குறித்து சிறப்பு அமர்வும் நடைபெற்றது. நாட்டின்



பல்வேறு பகுதிகளில் இருந்து அறிஞர்கள், அறிவுஜீவிகள், ஆய்வாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பெருமளவில் இதில் கலந்து கொண்டனர். வரலாற்றின் துல்லியமான உண்மைகளை நிலைநிறுத்துவதில் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குவதுடன், அதன் மூலம் தேசம் மற்றும் சமூகத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதிலும் பங்காற்றுவதாக பங்கேற்பாளர்கள் உறுதி பூண்டனர்.

## மணிப்பூர் வன்முறை: பொறுப்புக்கூறல், குடிமை உரிமைகள் பாதுகாப்பு மற்றும் உடனடி பேச்சுவார்த்தை அவசியம் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத் தலைவர் வலியுறுத்தல்...

புது தில்லி: மணிப்பூரில் மீண்டும் வன்முறை தீவிரமடைந்து வருவது குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அமைப்பின் துணைத் தலைவர் பேராசிரியர் முஹம்மது சலீம் இன்ஜினியர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். சமீபத்திய சம்பவங்கள் கடுமையான மனிதாபிமான மற்றும் குடிமை உரிமை நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன என்றும், இதில் அதிகாரிகள் அவசரமாகவும் பொறுப்புடனும் தலையிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களுக்கு அவர் அளித்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: “வீட்டிற்குள் இருந்த இரண்டு சிறு குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டது, போராட்டங்களின்போது பொதுமக்களின் உயிரிழப்பு மற்றும் தனித்தனி சம்பவங்களில் பொதுமக்களும் பாதுகாப்புப் படை வீரரும் கொல்லப்பட்ட சம்பவங்கள் மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றன. இது அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள பாரிய தோல்வியைக் காட்டுகிறது. இத்தகைய சம்பவங்கள் யார் செய்திருந்தாலும், பாரபட்சமின்றி கண்டிக்கப்பட வேண்டும். போராட்டக்காரர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் கடுமையான பலத்தைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் தகவல்கள், அதன் விகிதாச்சாரம் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகள் குறித்து பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றன. ஆரம்பக்கட்டத் தாக்குதல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்த துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட அனைத்துச் சம்பவங்கள் குறித்தும் சுதந்திரமான, பாரபட்சமற்ற மற்றும் காலக்கெடுவுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட்டு, பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை மீண்டும் உருவாகும். மெய்தி, குக்கி-ஜோ மற்றும் நாகா சமூகங்களை உள்ளடக்கி இந்த மோதல் விரிவடைவது ஆபத்தான சூழலாகும். இது பேச்சுவார்த்தை மற்றும் நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள முறிவைச் சுட்டிக்காட்டுகிறது. ஊரடங்கு உத்தரவு மற்றும் இணையச் சேவைகள் முடக்கம் ஆகியவை பாதுகாப்பு நடவடிக்கைகளாகக் கூறப்பட்டாலும், அவை தகவல்களைப் பெறுவதிலும் கள நிலவரங்களைச் சுதந்திரமாகப் பதிவு செய்வதிலும் பாதிப்பை ஏற்படுத்தி, குடிமை உரிமைகளைக் கட்டுப்படுத்துகின்றன. விசாரணையில் ஏற்படும் தாமதமும், குற்றவாளிகளைக் கண்டறிவதில் முன்னேற்றம் இல்லாததும் மக்களின் கோபத்தையும் அவநம்பிக்கையையும் மேலும் அதிகரிக்கக்கூடும். கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட சிவிலியன் பகுதிகளில் அதிகரித்து வரும் ராணுவமயமாக்கல், சாதாரண குடிமக்களைப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. 2023-ஆம் ஆண்டு வன்முறை வெடித்ததில் இருந்தே தீர்க்கப்படாமல் உள்ள ஆழமான கட்டமைப்புச் சிக்கல்களை இந்தச் சூழல் பிரதிபலிக்கிறது. ஏற்கனவே ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், இந்த மோதல் விரிவடைவது மேலும் துருவமுனைப்புக்கும் உறுதியற்ற தன்மைக்கும் வழிவகுக்கும்.

எந்தவொரு சமூகத்தையும் ஒட்டுமொத்தமாகக் குற்றம் சாட்டக் கூடாது. அத்தகைய போக்கு பதற்றத்தை மட்டுமே அதிகரிக்கும். அரசு அனைத்துச் சமூகங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்து, சட்டத்தின் ஆட்சியை நியாயமான முறையிலும் பாரபட்சமின்றியும் நிலைநாட்ட வேண்டும். மணிப்பூர் சிக்கலைத் தீர்க்க வெறும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மட்டும் போதாது. நம்பகமான விசாரணை, வன்முறைக்குக் காரணமானவர்கள் மீதான நடவடிக்கை, குடிமை உரிமைகளை மீட்டெடுத்தல் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான அணுகுமுறை அவசியம். அமைதியை நிலைநாட்ட பேச்சுவார்த்தை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், அரசியல் சாசன உரிமைகளைப் பாதுகாக்கவும், அமைதியை மீட்டெடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது. நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித மாண்புகளுக்கு மதிப்பளிப்பதன் மூலமே நிலையான அமைதியை எட்ட முடியும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## உழைப்பாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது காலத்தின் தேவை: உழைப்பாளர் தினத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் வாழ்த்து...

சென்னை: உலகம் முழுவதும் மே 1-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படும் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவர் மௌலவி A. முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: "உழைப்பே மனித வாழ்வின் அடித்தளம். ஒவ்வொரு தொழிலாளரும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அளிக்கும் பங்களிப்பு அளப்பரியது. இஸ்லாம் உழைப்பை உயர்ந்த பண்பாகக் கருதி, தன் கைகளால் உழைத்து நேர்மையாக வாழ்வாதாரம் ஈட்டுவதை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒருவர் தன் உழைப்பால் சம்பாதிப்பதே சிறந்த வருமானம் என்று கூறி உழைப்பின் பெருமையை எடுத்துரைத்துள்ளனர். மேலும், 'உழைப்பாளியின் வியர்வை உலர்வதற்கு முன் அவருக்குரிய கூலியை வழங்கிவிடுங்கள்' என்று அறிவுறுத்தியுள்ளனர். உழைப்பாளர்கள் அனைவரையும் மரியாதையுடனும் மனிதநேயத்துடனும் நடத்த வேண்டும் என்றும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. இன்றைய சூழலில் உலகம் முழுவதும் பல தொழிலாளர்கள் இன்னும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது காலத்தின் தேவையாகும். சமத்துவமும் சமூக நீதியும் நிலைநாட்டப்பட வேண்டும். அதேவேளையில், உழைப்பாளர்களும் தங்கள் பணி சார்ந்த கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்ற முழு முயற்சியுடன் செயல்பட வேண்டும். இந்த உழைப்பாளர் தினத்தில் அனைத்து தொழிலாளர்களுக்கும் எனது இதயங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ சமூகமும் அரசும் தேவையான நடவடிக்கைகளை



மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.


## தேர்தல் நடைமுறைகள், தேர்தல் பிந்தைய வன்முறை, பண வீக்கம் மற்றும் வெப்ப அலை குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் கவலை...




புது தில்லி: தேர்தல் நடத்தப்பட்ட விதம், மேற்கு வங்கத்தில் நடைபெற்று வரும் தேர்தல் பிந்தைய வன்முறைகள், அதிகரித்து வரும் விலைவாசி உயர்வு மற்றும் பொதுமக்களின் பெரும் பகுதியைப் பாதித்து வரும் வெப்ப அலை உள்ளிட்ட சமீபத்திய அரசியல் மற்றும் சமூக-பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) தலைமை ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. ஜமாஅத்தின் மாதாந்திர செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அதன் துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம் கான், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளா, அசாம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்தார். சில மாநிலங்களில் புதிய அரசுகள் பதவியேற்க உள்ள நிலையிலும், சில மாநிலங்களில் மீண்டும் அதே அரசுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையிலும், அனைத்து அரசுகளும் உள்ளடக்கிய, பொறுப்புணர்வுமிக்க மற்றும் மக்கள் நலன் சார்ந்த நிர்வாகத்தை வழங்க வேண்டியது அவசியம் என்றார். பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, கல்வி மற்றும் சமூக நீதி தொடர்பான சவால்களை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில், வெறும் அடையாள நடவடிக்கைகளை விடுத்து அரசு உடனடியாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், மேற்கு வங்கத்தில் உடனடியாக சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டி, வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். மேற்கு வங்கத் தேர்தலில் வாக்காளர் பட்டியல் திருத்தம், விளிம்புநிலை மக்களின் வாக்குரிமை பறிக்கப்படுவதாக எழுந்த புகார்கள் மற்றும் நிர்வாக இயந்திரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் குறித்தும் மலிக் முஹ்தசிம் கான் கவலை தெரிவித்தார். தேர்தல் பிரச்சாரங்களின்போது பயன்படுத்தப்பட்ட துருவமுனைப்பு அரசியல், ஜனநாயகச் சூழலைப் பாதித்துள்ளதோடு, தேர்தல் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை குறித்தும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது என்றார். அசாம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் பண பலம் மற்றும் பிளவுபடுத்தும் பேச்சுகள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் குறித்தும் அவர் தனது அதிருப்தியைப் பதிவு செய்தார். விலைவாசி உயர்வு குறித்துப் பேசிய ஜமாஅத்தின் மற்றொரு துணைத் தலைவர், பொறியாளர் முஹம்மது சலீம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் மீது அதிகரித்துள்ள நிதிச் சுமை குறித்து கவலை தெரிவித்தார். சமையல் எரிவாயு (LPG), எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டண உயர்வு ஆகியவை போக்குவரத்து மற்றும் உணவுப் பொருட்களின் விலையையும் உயர்த்தியுள்ளதாகவும், இதனால் நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களின் வாங்கும் திறன் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்

கூறினார். எரிபொருள் மீதான கலால் வரி மற்றும் வாட் (VAT) வரியைக் குறைப்பதன் மூலம் விலையை நிலைப்படுத்த வேண்டும் என்றும், பெட்ரோல் மற்றும் டீசலை ஜிஎஸ்டி (GST) வரம்பிற்குள் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சுற்றுச்சூழல் மற்றும் வெப்ப அலை பாதிப்புகள் குறித்துப் பேசிய பொறியாளர் முஹம்மது சலீம், காடழிப்பு மற்றும் முறைப்படுத்தப்படாத நகரமயமாக்கலே வெப்ப அலையின் தீவிரம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன என்றார். வெளியில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புற ஏழைகளைப் பாதுகாக்க உடனடியாக ‘வெப்ப விழிப்புணர்வு திட்டங்களை’ (Heat Action Plans) அமல்படுத்த வேண்டும் என்றும், குடிநீர் வசதி, வேலை நேரக் கட்டுப்பாடு மற்றும் பசுமைப் பரப்பை அதிகரித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## NEET UG 2026 தேர்வு ரத்து: சுதந்திரமான விசாரணை, குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை அவசியம் – பேராசிரியர் முஹம்மது சலீம்...




புது தில்லி: NEET UG 2026 நுழைவுத் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படும் நிலையில், அதன் விளைவாகத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருப்பதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அமைப்பின் மத்திய கல்வி வாரிய (MTB) தலைவர் பேராசிரியர் முஹம்மது சலீம் கடுமையாகக் கண்டித்துள்ளார். தேர்வின் நேர்மையையும் வெளிப்படைத்தன்மையையும் நிலைநாட்டத் தவறியதற்கும், மருத்துவத் துறையில் தேசத்திற்குச் சேவை செய்ய விரும்பும் பல லட்சம் மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதித்ததற்கும் மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமை (NTA) ஆகியவையே பொறுப்பு என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார். இதுகுறித்து ஊடகங்களுக்கு அவர் அளித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “NEET UG 2026 தேர்வில் முறைகேடுகள் நடைபெற்று, அதன் காரணமாகத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். நீட் தேர்வு என்பது ஆண்டுதோறும் 20 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் எழுதும் நாட்டின் மிக முக்கியமான போட்டித் தேர்வுகளில் ஒன்றாகும். உண்மையான வினாத்தாளில் இடம்பெற்ற பெரும்பாலான கேள்விகளுடன் ஒத்துப்போகும் வகையில் ஒரு ‘யூகிப்பு வினாத்தாள்’ (Guess Paper) வெளியானது, தேசிய தேர்வு முகமையின் (NTA) செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான குறைபாட்டை வெளிப்படுத்துகிறது. இத்தகைய மிகத் துல்லியமான வினாத்தாள்கள் முறைசாரா வலைதளங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் வழியாகப் பரவலாக விற்பனை செய்யப்பட்டிருப்பது, இது திட்டமிடப்பட்ட முறைகேடு என்பதைக் காட்டுகிறது. இத்தகைய வினாத்தாள் கசிவுகள் தேர்வு முறையின் மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதைப்பதோடு, தகுதி மற்றும் சம வாய்ப்பு குறித்த மாணவர்களின் நம்பிக்கையையும்

கேள்விக்குள்ளாக்குகின்றன. பல லட்சம் நீட் தேர்வர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைத்துள்ள இந்தத் தோல்விக்கு அரசாங்கமும் NTA-வும் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும். NEET (UG) 2026 தேர்வை ரத்து செய்துவிட்டு மீண்டும் தேர்வு நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை எடுத்த முடிவும், இந்த விவகாரத்தை மத்திய புலனாய்வுத் துறையிடம் (CBI) ஒப்படைக்க அரசு எடுத்த முடிவும், இதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளின் தீவிரத்தை உறுதிப்படுத்துகின்றன. தேர்வு முறையின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்க இந்த முடிவு அவசியமானது என்றாலும், இது பல லட்சம் மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மிகுந்த மனஉளைச்சலையும் நிச்சயமற்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விதிமீறலுக்குக் காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு, மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். அதேவேளையில், இத்தகைய தோல்விகளுக்குப் பொறுப்பேற்று NTA மற்றும் கல்வி அமைச்சகத்தின் உயர்மட்டப் பொறுப்பில் உள்ளவர்கள் அறநெறி அடிப்படையில் பதவி விலக வேண்டும். இந்த விவகாரத்தில் உண்மையை வெளிக்கொணரவும், அனைத்து நிலைகளிலும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் சுதந்திரமான மற்றும் காலக்கெடுவுடன் கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். விசாரணை முறையில் முழுமையான வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும், முறைகேட்டில் ஈடுபட்ட நபர்கள் அல்லது குழுக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளை நாங்கள் வலியுறுத்துகிறோம். வருங்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க, தேர்வுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், கண்காணிப்பு வழிமுறைகளை மேம்படுத்தவும் முறையான சீர்திருத்தங்கள் தேவை. இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர் கே. ராதாகிருஷ்ணன் தலைமையிலான உயர்மட்டக் குழு பரிந்துரைத்தபடி, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான தேர்வு முறையை அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும். தேர்வு நடைமுறையின் அனைத்துக் கட்டங்களிலும் உள்ள ஓட்டைகளை அடைத்து, முறைகேடுகளைத் தடுக்க NTA கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## கமால் மௌலா மசூதி தீர்ப்பு: நீதித்துறை நடவடிக்கைகளில் நேர்மையும் புறநிலையும் அவசியம், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி...

புது தில்லி: மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் கமால் மௌலா மசூதியை கோவில் என்று அறிவித்து வழங்கியுள்ள சமீபத்திய தீர்ப்பு குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) அகில இந்திய தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். இத்தீர்ப்பு நீதித்துறை அமைப்பின் நம்பகத்தன்மை, சிறுபான்மையினரின் உரிமைகள், மதச் சுதந்திரம், வகுப்புவாத நல்லிணக்கம் மற்றும் நாட்டின் மதச்சார்பற்ற கட்டமைப்பு ஆகியவற்றில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார். ஊடகங்களுக்கு அவர் அளித்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “அரசியலமைப்புச் சட்டத்தின் 25 மற்றும் 26-ஆவது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள மத உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இந்தத் தீர்ப்பு முக்கியமான அரசியலமைப்புச் சட்டக் கேள்விகளை எழுப்புகிறது. பல தசாப்தங்களாக போஜ்சாலா வளாகம், இரு சமூகத்தினரும் அவரவர் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவான ஒரு உடன்பாட்டின் கீழ் இயங்கி வந்தது. ஒரு சமூகத்தின்

நிலைநாட்டப்பட்ட வழிபாட்டு உரிமைகளை நீக்கிவிட்டு, மற்றொரு சமூகத்திற்குச் சாதகமாகச் செயல்படுவது, நீண்டகாலமாக நடைமுறையில் இருந்த ஏற்பாட்டைச் சிதைப்பதோடு மட்டுமல்லாமல், அனைத்து மதங்களுக்கும் சமமான மரியாதை என்ற கொள்கையையும் சீர்குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தில் இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் எச்சரிக்கையுடனும் சமநிலையுடனும் அணுகப்பட வேண்டும். முஸ்லிம் சமூகத்திற்கு அவர்களின் வழிபாட்டுத் தலத்திற்கு பதிலாக மாற்று நிலம் ஒதுக்குவது என்ற பரிந்துரை கவலையளிக்கிறது. மத உரிமைகள் என்பது வெறும் இடவசதி அல்லது இடமாற்றம் சார்ந்த விஷயம் அல்ல; வழிபாட்டுத் தலங்கள் வரலாற்றுத் தொடர்ச்சி, அடையாளம் மற்றும் கூட்டு நினைவுகளுடன் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. வரலாற்று ரீதியாகப் பகிரப்பட்ட அல்லது சர்ச்சைக்குரிய இடத்திலிருந்து ஒரு சமூகத்தை வெளியேற்றுவது போன்ற அணுகுமுறை, அநீதி இழைக்கப்பட்ட உணர்வையும் அந்நியப்படுத்தப்பட்ட நிலையும் உருவாக்கும். இத்தகைய உணர்வுப்பூர்வமான விஷயங்களில் சர்ச்சைக்குரிய வரலாற்று மற்றும் தொல்பொருள் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பளிப்பது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். இத்தகைய அணுகுமுறைகள் ஒரு தரப்பின் வாதங்களுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். சுதந்திரத்தின் போது வழிபாட்டுத் தலங்கள் இருந்த நிலையிலேயே அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற ‘வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1991’-ஐப் புறக்கணித்துவிட்டு, மதத் தலங்கள் தொடர்பான சர்ச்சைகளை மீண்டும் கிளப்பும் ஒரு பரந்த போக்கின் பகுதியாகவே இந்த வழக்கைப் பார்க்க வேண்டியுள்ளது. வரலாற்றுச் சர்ச்சைகள் மீண்டும் உருவாவதைத் தடுக்க, 1991-ஆம் ஆண்டு சட்டம் அதன் முழுமையான அர்த்தத்தில் நிலைநாட்டப்பட வேண்டும். இக்கொள்கையில் ஏற்படும் எந்தவொரு தளர்வும் வகுப்புவாத நல்லிணக்கத்திற்கும் சமூக ஸ்திரத்தன்மைக்கும் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும். இந்த விவகாரம் அரசியலமைப்பு நெறிமுறைகள், நேர்மை மற்றும் அனைத்து சமூகங்களுக்குமான நீதியின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும். நீதித்துறை தனது செயல்பாடுகளில் நடுநிலையாக இருப்பதுடன், அது நடுநிலையாகச் செயல்படுகிறது என்ற நம்பிக்கையையும் பொதுமக்களிடம் உருவாக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, சமீபத்திய நிகழ்வுகள் அதற்கு நேர்மாறான ஒரு பிம்பத்தை உருவாக்கி வருகின்றன. இது இந்த முக்கிய நிறுவனத்தின் மீதான நம்பகத்தன்மை, கண்ணியம் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகம், மேல்முறையீடு உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர்வ தீர்வுகளையும் நாடும். இதன் மூலம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு அனைத்துக் கவலைகளும் முறையாகக் கேட்கப்பட்டு தீர்க்கப்படும். அனைத்து குடிமக்களின், குறிப்பாக சிறுபான்மையினரின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பாதுகாப்பது, தேசத்தின் ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற பண்புகளைப் பேணுவதற்கு அவசியமானதாகும்” என்று தெரிவித்துள்ளார்.

## குற்றவாளிகளுக்கு காலதாமதமின்றி உச்சபட்சத் தண்டனை வழங்க வேண்டும்...

கோவை: கோவை மாவட்டம் சூலூர் பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்துக்கு ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மௌலவி முஹம்மது ஹனீபா மன்பயீ அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: “கோவை மாவட்டம் சூலூர் பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல்

வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ள நிகழ்வு ஒட்டுமொத்த மனிதநேயச் சமூகத்தையும் உலுக்கியுள்ளது. பார்ப்போர் நெஞ்சைப் பதறவைக்கும் இந்த அநாகரிகமான, காட்டுமிராண்டித்தனமான செயலை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு சார்பில் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ள இந்தச் சம்பவம், ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கே பெரும் அவமானக் கறையாகும். தங்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வளர்க்க முடியுமா என்ற அச்சத்தையும் பெரும் கவலையையும் தமிழக மக்களிடையே, குறிப்பாக பெற்றோர்களிடையே, இந்தச் சம்பவம் தீவிரமாக ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய கொடூரக் குற்றங்களில் ஈடுபடும் மனித மிருகங்களுக்கு சட்டத்தின் முன் எந்தவிதமான தளர்வுகளோ சலுகைகளோ காட்டப்படக் கூடாது. இந்தக் கொலைவெறிச் செயலில் ஈடுபட்ட இருவருக்கும் சட்டப்படியான உச்சபட்சக் கடுமையான தண்டனை காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும். தண்டனைகள் தாமதமாவது இதுபோன்ற குற்றவாளிகளுக்குத் தைரியத்தை ஏற்படுத்தும் என்பதால், இந்த வழக்கில் நீதி உடனடியாக நிலைநாட்டப்பட வேண்டும். தமிழக அரசுக்கு நாங்கள் வைக்கும் மிக முக்கியமான கோரிக்கை என்னவெனில், பெண் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் எதிரான குற்றங்களில் அரசு மிகத் தீவிரமான, சமரசமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் இதுபோன்ற கொடூரமான சம்பவங்கள் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் அரசு சட்டம்-ஒழுங்கையும் பாதுகாப்பு அமைப்பையும் மேலும் பலப்படுத்த வேண்டும். 'இனி தமிழ்நாட்டில் இதுவே இதுபோன்ற கடைசி நிகழ்வாக இருக்க வேண்டும்' என்ற உறுதியுடனும் நோக்கத்துடனும் தற்போதைய அரசு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு உரிய நீதியும் தார்மீக ஆதரவும் தகுந்த நிவாரணமும் உடனடியாகக் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.




## டெல்லி தீ விபத்து: பாதுகாப்பு விதிமுறைகளை கடுமையாக அமல் படுத்த வேண்டும் – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் இன்ஜினியர்...

புது டெல்லி: டெல்லி மலவியா நகரில் அமைந்துள்ள ஹோட்டலில் ஏற்பட்ட கோர தீ விபத்தில் வெளிநாட்டினர்கள் உட்பட குறைந்தது 21 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் இன்ஜினியர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவலிமையையும்



பொறுமையையும் வழங்கிட இறைவனைப் பிரார்த்திக்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் நலம்பெற வாழ்த்துகிறேன். இந்த துயரகரமான சம்பவம், பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதிலும் அவற்றை அமல்படுத்துவதிலும் ஏற்பட்டுள்ள கடுமையான அலட்சியத்தின் விளைவாகும். அடிப்படை தீயணைப்பு பாதுகாப்பு வசதிகள் இல்லாததும், அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான விருந்தினர்களைத் தங்க வைப்பதற்காக அறைகள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவதும், பொது இடங்களிலும் வணிக நிறுவனங்களிலும் பாதுகாப்பு நெறிமுறைகளை ஒழுங்குபடுத்துவதில் ஏற்பட்டுள்ள நிர்வாகத் தோல்வியையும் மோசமான ஆளுகையையும் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய அலட்சியங்கள், குறிப்பாக மக்கள் நெருக்கமாக வாழும் நகர்ப்புற பகுதிகளில், மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் வருகையாளர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் உயிர்களை கடுமையான ஆபத்துக்கு உள்ளாக்குகின்றன. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் அவசியமானவையாகவும் பாராட்டத்தக்கவையாகவும் இருந்தாலும், நீண்டகால தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதுபோன்ற நிறுவனங்களில் பாதுகாப்பு விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். மேலும், விதிமுறைகள் கடுமையாக அமல்படுத்தப்படுவதோடு, அவற்றை மீறுபவர்கள் மீது தெளிவான மற்றும் உறுதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுமிக்க நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புற வளர்ச்சி முன்னெடுக்கப்பட வேண்டும். மனித உயிர்களைப் பாதுகாப்பதே அனைத்து வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளிலும் முதன்மையான முன்னுரிமையாக இருப்பதை உறுதி செய்யும் வகையில், இத்தகைய துயரச் சம்பவங்கள் அர்த்தமுள்ள சீர்திருத்தங்களுக்கு வழிவகுக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## சுற்றுச்சூழல் நெருக்கடி அறமும் பொறுப்பும் சார்ந்த சவால்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி தேசிய கருத்தரங்கில் வலியுறுத்தல்...

புது டெல்லி, ஜூன் 5, 2026: உலக சுற்றுச்சூழல் தினம் 2026-ஐ முன்னிட்டு, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மகளிரணி சார்பில் “சுற்றுச்சூழல் நெருக்கடி: அறத்திற்கும் பொறுப்பிற்குமான சோதனை” என்ற தலைப்பில் தேசிய அளவிலான இணையவழி கருத்தரங்கம் நடைபெற்றது. மனிதகுலம் எதிர்கொண்டு வரும் அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்குத் தேவையான அறநெறிசார் பொறுப்புகள் குறித்து ஆய்வு செய்யும் நோக்கில் நடைபெற்ற இந்நிகழ்வில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர். தலைமையுரையாற்றிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேசியச் செயலாளர் ரஹ்மத்துன்னிஸா A., சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பது அடிப்படையில் ஒரு அறநெறி மற்றும் ஆன்மிகக் கடமை என வலியுறுத்தினார். “ஒவ்வொரு மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு பூமி வளங்களை வழங்குகிறது; ஆனால் ஒவ்வொரு மனிதனின் பேராசையையும் பூர்த்தி செய்ய முடியாது” என்ற மகாத்மா காந்தியின் புகழ்பெற்ற கூற்றை மேற்கோள்

காட்டிய அவர், சுற்றுச்சூழல் என்பது மனிதகுலத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு அமானத் (நம்பிக்கைப் பொறுப்பு) எனக் குறிப்பிட்டார். இஸ்லாமியக் கோட்பாடான கலீஃபா (பாதுகாவலர் பொறுப்பு) குறித்து விளக்கிய அவர், படைப்பில் இறைவன் ஏற்படுத்தியுள்ள சமநிலையையும் நீதியையும் பாதுகாப்பதற்கான பொறுப்பு மனிதர்களுக்கு இருப்பதாகக் கூறினார். மேலும், சுற்றுச்சூழல் சீர்கேடு என்பது சமூக நீதியுடன் தொடர்புடைய பிரச்சினை என்றும், வசதிபடைத்தவர்களின் அளவுக்கு மீறிய நுகர்வு ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களையே அதிகம் பாதிக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார். நிலைத்தன்மை மிக்க வாழ்க்கை முறைகளையும் இயற்கை வளங்களின் சமமான பகிர்வையும் உறுதி செய்வதன் மூலம் பூமியை அனைவருக்கும் வாழத் தகுந்த இடமாக மாற்றுவதற்கான கூட்டு முயற்சிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார். தொடக்கவுரையாற்றிய ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேசிய உதவிச் செயலாளர் சுமைய்யா மர்யம், சுற்றுச்சூழல் நெருக்கடியை "நவீன சமுதாயத்தின் மதிப்பீடுகளையும் தேர்வுகளையும் பிரதிபலிக்கும் ஒரு அறநெறிக் கண்ணாடி" என்று வர்ணித்தார். உலகின் பல பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகள் மற்றும் கனடாவில் நிகழ்ந்த பேரழிவு தரும் காட்டுத்தீ சம்பவங்களைச் சுட்டிக்காட்டிய அவர், சுற்றுச்சூழல் சீர்குலைவுகள் மனிதர்களின் செயல்பாடுகள் மற்றும் நிலைத்தன்மையற்ற வாழ்க்கை முறைகளுடன் நெருங்கிய தொடர்புடையவை என்றார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகளின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்ட அவர், நீடித்த மாற்றத்தை உருவாக்குவதற்கு மனித நடத்தையிலும் அறநெறி உணர்விலும் மாற்றம் அவசியம் என வலியுறுத்தினார். கேரளாவைச் சேர்ந்த சமூக மானுடவியலாளர் டாக்டர் மஞ்சு J. மனோஜ், காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படுவது மீன்வள மற்றும் வனவளத்தைச் சார்ந்து வாழும் சமூகங்களே என்று குறிப்பிட்டார். சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்கனவே நிலவி வரும் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை மேலும் தீவிரப்படுத்துகின்றன என்றும் அவர் தெரிவித்தார். புது டெல்லியைச் சேர்ந்த காலநிலை ஆய்வாளர் சித்ரா கங்வானி, சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் எதிர்கொள்ளும் தண்ணீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றத்தால் உருவாகும் பேரிடர்கள் மற்றும் போதிய மறுவாழ்வுத் திட்டங்கள் இல்லாமை போன்ற சவால்களை எடுத்துரைத்தார். இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் காலநிலைத் தாங்குதிறனை மேம்படுத்த வலுவான நிதி மற்றும் நிறுவனக் கட்டமைப்புகள் அவசியம் என அவர் வலியுறுத்தினார். கோவாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரும் கட்டிடக் கலைஞருமான தலுலா டி சில்வா, சிமெண்ட் மற்றும் கான்கிரீட்டின் அளவுக்கு மீறிய பயன்பாட்டை முன்னிலைப்படுத்தும் தற்போதைய வளர்ச்சி மாதிரிகளை விமர்சித்தார். இயற்கையுடன் ஒத்திசைவான மற்றும் நிலைத்தன்மை கொண்ட கட்டுமான முறைகளுக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அளவுக்கு மீறிய நுகர்வை "எதிர்கால தலைமுறைகளின் உரிமைகளைப் பறிக்கும் தலைமுறைகளுக்கிடையேயான காலனித்துவம்" என்று வர்ணித்தார். அகமதாபாத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரும் ஊர்வன உயிரின மீட்புப் பணியாளருமான சுமைய்யா ஹசீப் ஷேக், வெறும் குறியீட்டு சுற்றுச்சூழல் பிரச்சாரங்கள் மற்றும் புகைப்பட விளம்பர நடவடிக்கைகளைத் தாண்டி, அர்த்தமுள்ள சமூகப் பங்கேற்பும் நிலையான நடத்தை மாற்றமும் அவசியம் என்று வலியுறுத்தினார். அவரது கருத்தை ஆதரித்து, சத்தீஸ்கரைச் சேர்ந்த கல்வியாளர் ஃபக்ரா தபஸ்ஸும், சிறு வயதிலிருந்தே காலநிலை குறித்த கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். குப்பைகளைத் தரம் பிரித்து நிர்வகித்தல், வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற அன்றாட நடைமுறைகள் நிலையான வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாதவை என்றும் அவர் குறிப்பிட்டார். கருத்தரங்கின் நிறைவில், அறநெறி மதிப்புகள், பொறுப்புணர்வுள்ள வாழ்க்கை முறை மற்றும் கூட்டு செயல்பாடுகளின் அடிப்படையில் ஒரு "பசுமை மனச்சாட்சியை" வளர்த்தெடுக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் முன்வைக்கப்பட்டது.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பது வெறும் வளர்ச்சித் தேவையாக மட்டுமன்றி, தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கான தார்மிகப் பொறுப்பும் ஆகும் என்பதையும் நிகழ்வு மீண்டும் உறுதிப்படுத்தியது.

# மேற்கு வங்கத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்—ஏ.பி.சி.ஆர் உயர்மட்டக் குழு பார்வையிட்டு, சட்டப்பூர்வ பாதுகாப்பு வழங்க வலியுறுத்தல்...

*புது டெல்லி, ஜூன் 8, 2026:* சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்கத்தின் கள நிலவரத்தை ஆய்வு செய்வதற்காக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மற்றும் சிவில் உரிமைகள் பாதுகாப்பு சங்கம் (ஏ.பி.சி.ஆர்.) ஆகிய அமைப்புகளின் உயர்மட்டக் குழு மேற்கு வங்கத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்தக் குழுவில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் மாலிக் மோதசிம் கான், ஏ.பி.சி.ஆர். தேசியச் செயலாளர் நதீம் கான், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மேற்கு வங்க மாநிலத் தலைவர் டாக்டர் மசிஹுர் ரஹ்மான் மற்றும் பிற சமூக ஆர்வலர்கள் இடம்பெற்றிருந்தனர். குழுவின் உறுப்பினர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுமக்களைச் சந்தித்து, குறிப்பாக தோப்சியாவில் முன்மொழியப்பட்டுள்ள புல்டோசர் நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தோப்சியாவில் புல்டோசர் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சி செய்யப்பட்டதாகவும், பொதுமக்களின் போராட்டங்கள் மற்றும் நீதிமன்றத்தின் தடை உத்தரவைத் தொடர்ந்து அந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், இதற்கிடையில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த இடிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால், சுமார் 15,000 பேர் இடம்பெயர்வு மற்றும் வீடற்ற நிலை அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மற்றும் ஏ.பி.சி.ஆர். அமைப்புகள் தீவிர கவலை தெரிவித்ததுடன், முன்மொழியப்பட்டுள்ள இடிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தோப்சியா குடியிருப்பாளர்களுக்கு தேவையான அனைத்து சட்ட மற்றும் தார்மிக ஆதரவுகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்தன. தோப்சியா குடியிருப்பாளர்களுடனான சந்திப்பில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் மாலிக் மோதசிம் கான், அமைப்பின் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் உறுதியளித்தார். ஏ.பி.சி.ஆர். தேசியச் செயலாளர் நதீம் கான், பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் இப்பிரச்சினையின் சட்ட அம்சங்கள் குறித்து கலந்துரையாடி, எதிர்கால நடவடிக்கைகளில் சட்ட உதவி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். கொல்கத்தாவில் முஸ்லிம் அமைப்புகளின் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது. வங்காளம் முழுவதிலுமிருந்து பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். பொதுவான பிரச்சினைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தளர்வான கூட்டு வலையமைப்பை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் குழு மால்டா பகுதியிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது. இதில் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று தங்களது பிரச்சினைகள் மற்றும் குறைகளைப் பகிர்ந்து கொண்டனர்.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாகிகள், இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO), மாணவியர் இஸ்லாமிய அமைப்பு (GIO) மற்றும் சாலிடாரிட்டி இயக்கத்தின் நிர்வாகிகளும் இதில் கலந்து கொண்டனர். கூச் பெஹார், ஜல்பைகுரி, டார்ஜிலிங், தினாஜ்பூர் மற்றும் மால்டா உள்ளிட்ட பகுதிகளின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றனர். நிலவும் சூழ்நிலை குறித்து விவாதிப்பதற்காக மால்டாவில் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், அறிவுஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் தனிக் கூட்டமும் நடைபெற்றது. மேலும், இந்தக் குழு சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் முர்ஷிதாபாத் மாவட்டம், நாடியா மற்றும் பிர்பூம் ஆகிய பகுதிகளுக்கும் சென்று உள்ளூர் மக்களைச் சந்தித்து அவர்களின் கவலைகளை நேரடியாகக் கேட்டறிந்தது. முர்ஷிதாபாத்தில் அறிவுஜீவிகள் மற்றும் வழக்கறிஞர்கள் குழுவுடனும் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பேசிய மாலிக் மோதசிம் கான், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள அனைத்து குடியிருப்பாளர்களையும் சமமாக நடத்தி, அவர்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பையும் பாதுகாப்புணர்வையும் வழங்குவது மாநில அரசின் பொறுப்பு என்று வலியுறுத்தினார். அனைத்து குடிமக்களுக்கும் நீதியையும் சமமான அணுகுமுறையையும் உறுதி செய்வதில்தான் மேற்கு வங்கத்தின் முன்னேற்றமும் நலனும் அடங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்கத் தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழப்பு: பொறுப்பானவர்கள் பதிலளிக்க வேண்டும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் வலியுறுத்தல்...

புது தில்லி, ஜூன் 12, 2026: ஓமான் கடற்கரைக்கு அருகே பயணித்துக் கொண்டிருந்த *Settebello* என்ற வணிக எண்ணெய்க் கப்பலின் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் மூன்று இந்திய கடலோடிகள் உயிரிழந்த சம்பவத்தை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) தேசியத் தலைவர் சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி கடுமையாகக் கண்டித்துள்ளார். அண்மைக் காலங்களில் இந்திய பணியாளர்கள் பயணித்த மூன்றாவது கப்பல் அமெரிக்கப் படைகளால் தாக்கப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அப்பாவி உயிர்கள் பலியான இந்த துயரச் சம்பவம் குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்த அவர், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், இந்தக் கடினமான சூழலை எதிர்கொள்ள அவர்களுக்கு அல்லாஹ் பொறுமையையும் மன உறுதியையும் வழங்கிட பிரார்த்தனை செய்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: “பொதுமக்கள் பயணிக்கும் ஒரு வணிகக் கப்பலை இலக்காகக் கொண்டு தாக்கி, இந்தியப் பிரஜைகள் உயிரிழந்த சம்பவத்தை ‘துணைச் சேதம்’ (Collateral Damage) எனக் கூறி அலட்சியப்படுத்த முடியாது. சர்வதேச வணிகக் கடற்பாதைகள் உலகின் அத்தியாவசிய உயிர்நாடிகளாகும். அவற்றில் பணிபுரியும் பொதுமக்கள் எந்தவொரு இராணுவ நடவடிக்கையாலும் ஆபத்துக்குள்ளாக்கப்படக் கூடாது. இத்தகைய நடவடிக்கைகள் மனிதாபிமானக் கோட்பாடுகளின் கடுமையான மீறலாகும். மேலும், அவை சர்வதேச நெறிமுறைகளைப் பலவீனப்படுத்தி, பிராந்திய அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. அமெரிக்க இராணுவத்தின் பொறுப்பற்ற தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் கொல்லப்பட்டிருப்பது மிகவும் அதிர்ச்சியூட்டும் மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். எந்தவொரு இராணுவ அல்லது அரசியல் நோக்கமும் அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. இந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். மேலும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட்டு, பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.”

இவ்விவகாரத்தில் இந்திய அரசு உறுதியான மற்றும் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்தத் தாக்குதல் மற்றும் இந்தியப் பிரஜைகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக அமெரிக்காவிடம் இந்திய அரசு கடுமையான ராஜதந்திர எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படுவதுடன், அவர்களைச் சார்ந்திருப்போருக்கு உடனடி நிதியுதவி, வேலைவாய்ப்பு ஆதரவு மற்றும் தேவையான அனைத்து நிவாரண, மறுவாழ்வு உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். பிராந்தியத்தில் தீவிரமடைந்து வரும் மோதல் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்திய சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி, ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் மேற்கொண்டு வரும் இராணுவத் தாக்குதல்கள் சர்வதேச சட்டத்தையும், நாடுகளின் நடத்தை தொடர்பான உலகளாவிய ஒப்புக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளையும் வெளிப்படையாக மீறுவதாகக் குறிப்பிட்டார். இத்தகைய நடவடிக்கைகள் தொடருமானால், பிராந்தியத்தில் மேலும் பதற்றம் அதிகரிக்கும் அபாயம் உள்ளதுடன், பொதுமக்களின் உயிர்கள் ஆபத்துக்குள்ளாகும். சர்வதேச வர்த்தகப் பாதைகள் பாதிக்கப்படுவதோடு, உலக அமைதி மற்றும் பொருளாதார நிலைத்தன்மையும் கடுமையாகச் சீர்குலையும் என்றும் அவர் எச்சரித்தார். பிராந்தியத்தில் மேலும் பதற்றம் அதிகரிப்பதைத் தடுக்கவும், மனித உயிர்களின் புனிதத்தன்மையையும் சர்வதேச சட்டத்தின் மேன்மையையும் பாதுகாக்கவும், சர்வதேச சமூகமும் இந்திய அரசும் இந்த மோதலில் பயனுள்ள தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் அழைப்பு விடுத்தார்.



## சட்டவிரோத இடிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வலியுறுத்தல்...

புது டெல்லி, ஜூன் 16, 2026: ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் (JIH) தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், அமைப்பின் மூத்த தலைவர்கள் நாடு முழுவதும் நடைபெற்று வரும் இடிப்பு நடவடிக்கைகள், சமீபத்தில் அறிவிக்கப்பட்ட அமெரிக்கா–ஈரான் அமைதி ஒப்பந்தம், மாநிலங்களவைத் தேர்தல் நடைமுறையின் நம்பகத்தன்மை மற்றும் மேற்கு வங்கத்தின் தேர்தலுக்குப் பிந்தைய நிலைமை குறித்து தங்களது கருத்துகளை வெளியிட்டனர். ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் மலிக் முஹ்தசிம் கான் பேசுகையில், டெல்லியில் நடைபெற்று வரும் இடிப்பு நடவடிக்கைகள் உரிய சட்ட நடைமுறைகளையும் முறையான மறுவாழ்வுத் திட்டங்களையும் பின்பற்றாமல் மேற்கொள்ளப்படுவதாகக் கடுமையாகக் கண்டனம் தெரிவித்தார். இத்தகைய நடவடிக்கைகள் அடிப்படை உரிமைகளுக்கும் மனித மாண்புக்கும் எதிரான மனிதாபிமானமற்ற செயல்கள் என்று அவர் குறிப்பிட்டார். “கடந்த சில வாரங்களில் டெல்லி, பாந்த்ரா, பரீதாபாத், விராம்காம் (குஜராத்), கோரேகான் (மகாராஷ்டிரா), வாரணாசி, சம்பல், ஜெய்ப்பூர், பயந்தர், பிம்ப்ரி-சின்ச்வாட் (PCMC), இடாவா உள்ளிட்ட பல பகுதிகளில் இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிம்ப்ரி-சின்ச்வாட்டில் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கு அதிகாரிகள் நோட்டீஸ் வழங்கியதுடன், நள்ளிரவு நடவடிக்கையில் பல கட்டிடங்கள் இடிக்கப்பட்டன. சூரத்தின் நாசிர் நகரில் மூன்று நாட்களில் 106

வீடுகள் இடிக்கப்பட்டன. ஜெய்ப்பூரில் சாலை விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக நூரானி பள்ளிவாசல் இடிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் போதிய தங்குமிடமின்றியும், மறுவாழ்வு குறித்த எந்தத் தெளிவும் இன்றியும் தவித்து வருகின்றனர். கடுமையான கோடை வெயிலிலேயே அவர்கள் பெரும் துயரத்தை அனுபவித்துள்ளனர். பருவமழை நிலைமையை மேலும் மோசமாக்கும் அபாயம் உள்ளது. உரிய மறுவாழ்வு ஏற்பாடுகள் செய்யப்படாமல் வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது'' என்றார். நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மாண்பான வாழ்க்கையை உறுதி செய்யும் வகையில் இத்தகைய இடிப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அமெரிக்கா–ஈரான் அமைதி ஒப்பந்தம் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் துணைத் தலைவர் பேராசிரியர் முஹம்மது சலீம் பேசுகையில், ''சமீபத்தில் அறிவிக்கப்பட்ட அமெரிக்கா–ஈரான் அமைதி ஒப்பந்தத்தை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் வரவேற்கிறது. இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து அம்சங்களும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினராலும் அதன் எழுத்து மற்றும் உணர்வின் அடிப்படையிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என நம்புகிறோம். நீண்டகால பதற்றத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், மோதல்களைக் குறைத்து பிராந்தியத்தில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதற்கான முக்கியமான முன்னேற்றமாகும். இந்த ஒப்பந்தம் மீறப்படாத வகையில் மத்தியஸ்த நாடுகளும் சர்வதேச சமூகமும் உறுதியான பங்காற்ற வேண்டும். ஏதேனும் மீறல்கள் நிகழ்ந்தால், அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைப் பொருட்படுத்தாமல், அவர்களின் அரசியல், இராணுவ அல்லது பொருளாதார வலிமையைக் கருத்தில் கொள்ளாமல், நியாயமான மற்றும் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த முன்னேற்றம் பொருளாதார அழுத்தங்களைக் குறைத்து, விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை மற்றும் நிதிச் சிரமங்களால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கக்கூடும். அமைதி மற்றும் உரையாடலை மேம்படுத்துவதில் இந்திய அரசு மேலும் முனைப்பான பங்கை வகிக்க வேண்டும் என்று ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் எதிர்பார்க்கிறது. அதேவேளை, ஈரான் மக்களுடன் எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறோம். மேலும், காஸா மற்றும் பாலஸ்தீனத்தில் நடைபெற்று வரும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமான மீறல்கள் போன்ற அநீதிகளை சர்வதேச சமூகம் புறக்கணிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகிறோம்'' என்றார். மாநிலங்களவைத் தேர்தல் குறித்து அவர் மேலும் கூறுகையில், ''சமீபத்திய போக்குகள் தேர்தல் நடைமுறையின் நம்பகத்தன்மை குறித்து கவலைக்கிடமான கேள்விகளை எழுப்புகின்றன. குதிரைப் பேரம், பண பலம், சட்டமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்துதல் மற்றும் கட்சி மாறி வாக்களித்தல் போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. நியமனப் பத்திரங்கள் தொடர்பாக தன்னிச்சையான முடிவுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு மற்றும் வெளிப்படைத்தன்மையின்மை ஆகியவை நிறுவனங்களின் நடுநிலைத்தன்மை குறித்து கடுமையான சந்தேகங்களை எழுப்பியுள்ளன. சமீபத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட சம்பவம், அதன் வரலாற்றிலேயே முதல்முறையாக நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இது நடைமுறை நியாயத்தின் மீது கேள்விக்குறி எழுப்புவதோடு, ஆபத்தான முன்னுதாரணத்தையும் உருவாக்குகிறது'' என்றார். மேற்கு வங்கத்தின் நிலைமை குறித்து ஏ.பி.சி.ஆர். தேசியச் செயலாளர் நதீம் கான் பேசுகையில், ''அரசியல் விசுவாசங்களை கட்டாயப்படுத்தி மாற்ற முயற்சிகள், எதிர்க்கட்சிகளை உடைக்கும் நடவடிக்கைகள் மற்றும் எதிர்க்கட்சியினருக்கு எதிரான தெருமட்ட வன்முறை சம்பவங்கள் குறித்த பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. இவை அனைத்தும் அச்சுறுத்தல் மற்றும் கட்டாயப்படுத்தல் நிறைந்த சூழலை உருவாக்குகின்றன. குறிப்பாக தோப்சியா போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர வேண்டிய அபாயத்தை ஏற்படுத்தும்

வகையில் இடிப்பு நோட்டீஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகள் நியாயம் மற்றும் சட்ட நடைமுறை குறித்து தீவிரமான கேள்விகளை எழுப்புகின்றன. சட்டவிரோத கட்டிடங்கள் இருந்தால் அவை சட்டத்திற்குட்பட்டு கையாளப்பட வேண்டும். ஆனால் எந்த நடவடிக்கையும் சட்ட நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கு வங்கத்தில் நடைபெற்று வரும் இடிப்பு நடவடிக்கைகள், அரசியல் கட்டாயப்படுத்தல் மற்றும் அச்சுறுத்தல் குறித்த தகவல்களுடன் இணைத்துப் பார்க்கும்போது, ஜனநாயக செயல்பாடுகளுக்கே ஆபத்தாக மாறிவரும் ஒரு சூழல் உருவாகி வருவதை சுட்டிக்காட்டுகின்றன" என்றார். செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தலைவர்கள், குடிமை அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் சட்ட நிபுணர்கள் இந்த விவகாரங்களை தீவிரமாக எடுத்துக்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும் என்று கூட்டாகக் கேட்டுக்கொண்டனர். நாட்டின் அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கு, அனைத்து குடிமக்களினதும் உரிமைகள், மாண்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அடிப்படையான அவசியம் என்பதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மீண்டும் வலியுறுத்தியது.




# மௌலானா ஸையத் சல்மான் ஹுஸைனி நத்வி (ரஹ்.) மறைவு: ஈடு செய்ய முடியாத பேரிழப்பு – ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தலைவர் இரங்கல்

மௌலானா ஸையத் சல்மான் ஹுஸைனி நத்வி (ரஹ்.) அவர்களின் மறைவையொட்டி, ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய தலைவர் ஸையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மௌலானா ஸையத் சல்மான் ஹுஸைனி நத்வி (ரஹ்.) அவர்களின் திடீர் மறைவு செய்தி எனக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும் மிகுந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர் இக்காலத்தின் தலைசிறந்த மார்க்க அறிஞர், புகழ்பெற்ற எழுத்தாளர், கல்வியாளர் மற்றும் சிந்தனையாளர் ஆவார். அவருடைய மறைவு அவரது குடும்பத்தினருக்கும் மாணவர்களுக்கும் மட்டுமல்ல; ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்திற்கும், இஸ்லாமிய உலகின் அறிவியல் மற்றும் கல்வித் துறைகளுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். மௌலானா ஸையத் சல்மான் ஹுஸைனி நத்வி (ரஹ்.) அவர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் கல்வி, ஆய்வு, இஸ்லாமிய அழைப்புப் பணி (தஃவா), அறிவுசார் வழிகாட்டுதல் மற்றும் கல்வி நிறுவனங்களின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்காக அர்ப்பணித்திருந்தார். திருக்குர்ஆன், ஹதீஸ், ஸீரத் மற்றும் இஸ்லாமிய ஃபிக்ஹ் ஆகிய துறைகளில் தலைசிறந்த ஆசிரியராகத் திகழ்ந்த அவர், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி மற்றும் ஆளுமைப் பயிற்சியை வழங்கியுள்ளார். அவருடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் கல்விசார் பங்களிப்புகள்,



## مولانا سید سلمان حسینی ندویؒ کے انتقال پر جماعتِ اسلامی ہند کے امیر سید سعادت اللہ حسینی کا تعزیتی پیغام

مولانا سید سلمان حسینی ندوی صاحبؒ کے اچانک انتقال کی خبر سے گہرا صدمہ ہوا۔ وہ دورِ حاضر کے ممتاز عالم دین، معروف مصنف، ماہر تعلیم اور دانشور تھے۔ ان کا انتقال نہ صرف ان کے اہلِ خانہ اور شاگردوں بلکہ پوری امتِ مسلمہ اور عالمِ اسلام کے علمی حلقوں کے لیے ایک ناقابل تلافی نقصان ہے۔

مولانا سید سلمان حسینی ندویؒ نے اپنی پوری زندگی تعلیم، تحقیق، دعوتِ دین، فکری رہنمائی اور علمی و تعلیمی اداروں کی تعمیر و ترقی کے ذریعے اسلام کی خدمت کے لیے وقف کر دی۔ قرآن، حدیث، سیرت اور اسلامی فقہ کے ایک ممتاز استاد کی حیثیت سے انہوں نے ہندوستان اور بیرونِ ملک ہزاروں طلبہ کی تعلیم و تربیت کی۔ ان کی تصانیف، مقالات، خطبات اور علمی خدمات ایک ایسا علمی سرمایہ ہے جس سے امتِ مسلمہ طویل عرصے تک استفادہ کرتی رہے گی۔

دارالعلوم ندوۃ العلماء اور جامعہ سید احمد شہید سے ان کی طویل وابستگی، جمعیت شباب الاسلام کی قیادت اور متعدد تعلیمی و طبّی اداروں کے قیام میں اپنے کلیدی کردار نیز علم دین کی اشاعت، کردار سازی اور سماجی خدمات میں اپنی سرگرمی کے لیے وہ ہمیشہ یاد رکھے جائیں گے۔ انہوں نے دینی علوم کی گہری بصیرت کو عصرِ حاضر کے تقاضوں سے ہم آہنگ کرتے ہوئے ہندوستان اور عالمی سطح پر اسلامی فکر و دانش کو نئی جہت عطا کی۔

بڑے سے بڑا مفکر بھی غلطیوں اور لغزشوں سے مکمل پاک نہیں ہو سکتا۔ مولانا سلمان صاحب کے بعض خیالات، مواقف اور بیانات سے اختلاف ہو سکتا ہے۔ لیکن ان کی وجہ سے ان کی ہمہ جہت گراں قدر خدمات کی اہمیت کم نہیں ہو سکتی۔

جماعت اسلامی ہند کی جانب سے میں ان کے اہلِ خانہ، شاگردوں، رفقائے کار، عقیدت مندوں، اور پوری ملت اسلامیہ سے دلی تعزیت کا اظہار کرتا ہوں۔ ہم ان کے غم میں برابر کے شریک ہیں اور دعا گو ہیں کہ اللہ تعالیٰ تمام پسماندگان کو صبرِ جمیل عطا فرمائے۔

ہم اللہ سبحانہٗ و تعالیٰ سے دعا کرتے ہیں کہ وہ مولانا مرحوم کی لغزشوں کو معاف فرمائے، اسلام کے لیے ان کی تمام عمر کی خدمات کو صدقۂ جاریہ بنائے، انہیں صالحین کے اعلیٰ درجات میں جگہ عطا فرمائے اور جنت الفردوس میں بلند مقام نصیب فرمائے۔ نیز اللہ تعالیٰ امتِ مسلمہ کو ایسے باکردار اور باصلاحیت علماء عطا فرمائے جو دین کی خدمت کے اس عظیم مشن کو آگے بڑھاتے رہیں۔

جماعت اسلامی ہند

முஸ்லிம் சமுதாயம் நீண்ட காலம் பயனடையும் அரிய அறிவுச் செல்வமாக விளங்கும். தாருல் உலூம் நத்வத்துல் உலமாவுடனும் ஜாமிஆ ஸையத் அஹ்மத் ஷஹீத் கல்வி நிறுவனத்துடனும் அவர் கொண்டிருந்த நீண்டகால தொடர்பு, ஜம்இய்யத் ஷபாபுல் இஸ்லாம் அமைப்பின் தலைமைப் பொறுப்பு, மேலும் பல கல்வி மற்றும் மருத்துவ நிறுவனங்களை நிறுவுவதிலும் வளர்ப்பதிலும் அவர் ஆற்றிய முக்கிய பங்கு ஆகியவை என்றும் நினைவுகூரப்படும். மார்க்க அறிவை நவீன காலத்தின் தேவைகளுடன் இணைத்து, இந்தியாவிலும் உலகளாவிய அளவிலும் இஸ்லாமிய சிந்தனைக்கு புதிய பரிமாணத்தை அளித்தவர் அவர். எவ்வளவு பெரிய சிந்தனையாளராக இருந்தாலும், தவறுகள் மற்றும் கருத்து வேறுபாடுகளிலிருந்து முற்றிலும் விலகியவராக இருக்க முடியாது. மௌலானா சல்மான் நத்வி (ரஹ்.) அவர்களின் சில கருத்துகள், நிலைப்பாடுகள் அல்லது உரைகளில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவை, அவர் ஆற்றிய பன்முகத்தன்மை கொண்ட மகத்தான சேவைகளின் மதிப்பைக் குறைத்துவிட முடியாது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில், அவருடைய குடும்பத்தினர், மாணவர்கள், சக பணியாளர்கள், நேசிப்போர் மற்றும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது துயரத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம். அல்லாஹ் தஆலா அவருடைய குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நேசிப்போருக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக என்று பிரார்த்திக்கிறோம். மேலும், அல்லாஹ்விடம் நாங்கள் பிரார்த்திக்கிறோம்: மர்ஹூம் மௌலானா அவர்களின் தவறுகளை மன்னித்து, இஸ்லாத்திற்காக அவர் ஆற்றிய வாழ்நாள் முழுமையான சேவைகளை அவருக்கு நிரந்தர நன்மையாக (ஸதகத்துல் ஜாரியா) ஆக்குவானாக. அவரை நல்லடியார்களின் உயர்ந்த அந்தஸ்தில் சேர்த்து, சுவனபதி ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சொர்க்கத்தை வழங்குவானாக. அதேபோல், மார்க்கப் பணியை நேர்மையுடனும் திறமையுடனும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய சிறந்த குணநலனும் அறிவாற்றலும் கொண்ட அறிஞர்களை இந்த உம்மத்திற்கு அல்லாஹ் தொடர்ந்து வழங்குவானாக என்றும் இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்.